காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

26—12—71

★

உள்ளே......

ஆற்றல் நிலைக்கட்டும்!
(தலையங்கம்)

வாழ்க வங்க நாடு!
(கட்டுரை)

காலம் இப்படியே போகாது!
(சிறப்புக் கட்டுரை)

பஞ்சாயத்து!
(சிறுகதை)

சோழமாதேவி
(தொடர்கதை)

விலை 25 காசு

பூத்தது புரட்சிப் பூ!

(கவிஞர் வல்லம். வேங்கடபதி)

★

இந்தியத் துணைக்கண் டத்தில்
இன்றொரு புதிய நாடு
சந்திர உதயம் போல
சரித்திர வானில் தோன்றும்
விந்தையைக் கண்டு கண்டு
விருப்பொடு போற்று கின்றோம்!
வந்தனை செய்து நெஞ்சின்
வாழ்த்துகள் கூறு கின்றோம்!

அடங்கிய மக்கள் என்றும்
அடங்கியே கிடப்ப ரென்ற
மடம்படும் ஆட்சி பெற்ற
மாபெருந் தோல்வி கண்டு
நடமிடும் கிழக்க வங்க
நாட்டின ரோடு நாமும்
உடன்படு கின்றோம் இன்ப
ஊற்றினில் பாடு கின்றோம்!

மக்களின் உரிமைப் போரை
மதித்திடா யாகி யாகான்
துக்கடா'த் தனத்தால் நாடு
துண்டுதுண் டான தின்று!
சிக்கெனப் பிடிப்பேன் வெல்வேன்
சீறினேன் பார தத்தை
இக்கணம் பாரீர் என்றான்
இடந்தெரி யாது போனான்!

பாய்கவே புலிக ளென்று
படைகளை ஏவ அந்த
நாய்களோ கிழக்கு வங்க
நாட்டினில் நுழைந்து கொண்டு
ஓய்தலே இன்றி நாளும்
உயிர்ப்பலி ரத்த வேட்டை
வாய்கவே வாய்க வென்று
வளர்த்தன தீமை யன்றோ?

அன்னையர் கண்ணீர் விட்டே
அழஅழ கற்பழித்தும்
புன்னகை மழலைச் செல்வப்
பூக்களை மிதித்துத் தேய்த்தும்
புன்மைகள் இழைத்தே வங்கப்
பூமியை அலைக் கழித்த
கன்மனப் பாகித் தானின்
கயமையைச் சொல்லப் போமோ?

வீணரின் கொடுங்கோ லாட்சி
விழுந்திடும் அவர்ந டாத்தும்
ஆணவ தர்பா ரெல்லாம்
அடியொடு பொசுங்கிப் போகும்
காணிய என்பதே போல்
காட்டிய கிழக்கு வங்கம்
பூணுமோர் உரிமை வாழ்வில்
பூத்தது புரட்சிப் பூவாய்!

குளிர் மடந்தை

உலகியலாய் உயர்ந்து நடமாடுகின்ற
ஊக்கநிறைக் குளிர்மடந்தை மாறிமாறி
பலவியலாய்ப் பிறந்தவளாய்ப் பகருமிந்தப்
பாருலகெல்லாம் பரவிப் பூத்துத்தண்ணார்
மலருடலின் குளிருணர்வில் வையந் தன்னில்
மண்டியுள உயிருலவும் உடல்மீதெல்லாம்
நிலவியெழுந் தேயவளின் நினைவை யூட்ட
நிலையியலாய் விளையாடி உலவுகின்றாள்!

மண்ணகமும் விண்ணகமும் இணைந்தாற் போன்றே
மருவியெழுந் தேபெருகி மணந்து மின்னும்
கண்வியக்குப் பனியுலகின் தலைவியாகி
கரைகாணா இன்புணர்வோ டாடுகின்ற
பண்பினளாய்ப் பாருயிர்கள் தன்னை யெண்ணி
பதுங்குதலைப் பார்த்துநகை முகமும் பூத்து
எண்டிசையும் ஆளுமொரு பெருமையோடு
எழிலரசி சிலம்பொலிர இயங்கு கின்றாள்!

எண்ணுமவள் உலகாளுங் கொற்றந் தன்னில்
எழுந்தபெரு நிலைக்கொடுங்கோ லரசே யொப்ப
கண்டபல உயிர்மேவும் உடல்கள் தம்மின்
கணக்கற்ற நோயெழுந்து காய்ந்தே சோர
உண்ணுகின்ற உணவினுக்குந் தடைகள் தோன்றி
உகந்ததென வெறுங்கஞ்சி பருக நேர
திண்ணமுட னெவருடலுந் தீய்ந்தே தீரும்
தீநிலைகள் திணிக்குமொரு மங்கை யானாள்!

வான்முட்ட வளர்ந்துயர்ந்து வகையாய் மின்னும்
வண்ணமலைக் குன்றுகளில் நிலைத்தா ளாகி
தான்செய்யுங் கலைகளென இறுமாப் போடு
தடித்தபனிக் கட்டிகளை யுருவு மாக்கி
மீன்கொடிபோல் ஊர்ந்து விளையாடு கின்ற
மெய்ச்சிலிர்த்தும் மேனியுடல் நங்கையாகி
வான்கண்ட நிலவனைய மேகத் தோடும்
வளரு குளிர்க் கன்னியென வாழுகின்றாள்!

மின்னுமவள் வீரமென மிளிரச் செய்த
மிகுந்தபல விளையாட்டுச் செயல்கள் கண்ட
கன்னலவள் கனியகத்தை ஆட்சி செய்யுங்
காதலனும் கதிரவனும் வாணிற் தோன்றி
தன்னுயர்ந்த தாளாத மோகம் போன்றே
தங்கியதன் வெப்பநிலை உயர்த்திப் பொங்க
அன்பவன்முன் அடங்கியவள் அணைப்பு மேற்க
அகலுமெழிற் குளிர்மடந்தை யவளே யன்றோ!

— எழிற்கோவன்.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 26—12—71 | இதழ் 24

ஆற்றல் நிலைக்கட்டும்!

எத்தனை இன்னல்கள் நத்திடினும் எமை
ஏதும் செயவல்ல தொன்று உண்டு—அது
கத்திமுனையிலும் கூரிய வாளினும்
சுத்தம் படைத்திட்ட எங்கள் நெஞ்சம்!

—என்று கவிஞர் ஒருவர் எந்தக் காரணத்துக்காக எப்போது பாடி வைத்தாரோ தெரியவில்லை! இந்தப் பாடலின் பொருள், இப்போதைய இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அத்தனைப் பேரும் ஒன்றாக நின்று, ஒரே குரலில் பாடி, தங்களை உலகத்துக்குக் காட்டிக் கொள்ளக்கூடிய பெருமை வாய்ந்ததாகக் காணப் படுகிறது.

துணைக் கண்டத்தின் கிழக்கு, மேற்கு எல்லைப் பகுதிகளில், விரும்பத்தகாத முறையில் நம்மீது திணிக்கப்பட்ட போர் விபத்துக்கள், துணைக் கண்டத் தின் முப்படை வீரர்களாலும் உறுதியாகவும், திறமையாகவும் சமாளிக்கப்பட்டு, இந்திய மக்களது ஆற்றலைப் பற்றி தப்புக் கணக்குப் போட்டுக்கொண் டிருந்த நாடுகளது கண்களைத் திறந்துவிடவும் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாதான் போர்த்தினவில் திளைத்துக் கொண்டிருக்கிறது என்ற யாகியாகானின் கற்பனைக் குற்றச்சாட்டுக்களைப் பொய்யாக்குவதுபோல, இந்தி யப் பிரதமர் இந்திரா இலட்சியம் முடிந்த அடுத்த விநாடியே, ஒருதலைப் பட்சமாக, மேற்கு அரங்கில் போரை நிறுத்திவிடும்படியாக உத்திரவிட்ட ராச தந்திரம் குறித்து உலகின் பெரும்பான்மையான நாடுகள் வியப்பிலாழ்ந்து கிடக்கின்றன.

வேக வேகமாக சுறுசுறுப்படைந்து கொண்டு, மூளையைச் சொரிந்துகொண்டிருந்த ஐ. நா. நிறுவனம் கூட எதிர்பாராத அந்த போர்நிறுத்தச் செய்தியால் திகைப்படைந்துதான் போயிருக்க வேண்டும்.

எனவேதான் இந்தக் கிழமை, ஐ. நா. நிறுவனம், இந்தியா-பாகிஸ்தான் இரு நாடுகளும் போர் நிறுத் தத்தை உறுதிசெய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பதுடன், நிலைமைகள் பழுதுபடும் வகையில் எந்த நாடும் குழப்பம் விளைவிக்காமலிருக்க வேண்டும் என்றும் தீர்மான வடிவில் நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

நாடுகள் குழப்பம் விளைவிக்காமல் இருக்க வேண்டும் என்ற செய்தி வந்திருக்கும் அதே நேரத்தி லேயே, துரதிருஷ்ட வசமாக, பாகிஸ்தானின் ஜனாதி பதியாகப் பதவிக்கு வந்துவிட்ட புட்டோ, சீனா வுடன், இந்தியாவுக்கு எதிராக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளக்கூடும் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது.

புட்டோவின் அரசியல் ஞானம் பற்றியும் மனோ வலிமை பற்றியும், நாடு, இரண்டொரு கிழமைகளில் மிக அதிகமான அளவுக்குத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தானை — வங்க தேசத்தை — பாகிஸ்தானின் அதிகாரத்திலிருந்து முழுமையாகக் கைகழுவிவிட நேர்ந்ததற்கு இந்தப் புட்டோதான் காரணம் என்று அரசியல் அறிந்தோர் விமர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"முட்டாள்தனமாக"—இப்போது பாகிஸ்தான் தொடுத்தப் போர், ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்பதை, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் சொல்லிக்கொண்டே இருப்பவர்தான் புட்டோ! புட்டோ என்ற சொல்லுக்கு ஐ. நா. வில் "நாய்" என்ற பொருளும் இருப்பதாக எடுத்துக் காட்டிய அரசியல் மேதை அவர்!

ஜனாப். முகமதலி ஜின்னா அமர்ந்த ஜனாதிபதி நாற்காலியில், இவரும் அமர நேர்ந்தது, உலகத்துக்கு மட்டுமல்ல, பாகிஸ்தானுக்குக்கூட ஒரு களங்கம் தான் என்பதை நாடு விரைவில் உணரத்தான் போகிறது.

எனவே, இத்தகைய அதிமேதை, பதவிக்கு வந்தும் வராததுமான நிலையில் "போர் ஓய்ந்துவிட வில்லை" என்று பேசி இருக்கிறார்.

ஆகவே, வருங்காலத்தில், அவரது இலட்சியப்படி சீனாவின் துணையையும், அமெரிக்க நிக்சனின் ஆதர வையும் வைத்துக்கொண்டு, மேலும் மேலும் மேற்கெல்லையில் தொல்லை கொடுத்துக் கொண்டிருப் பார் என்பது மட்டும் எதிர்பார்க்கப்பட வேண்டி யதேயாகும்.

விரைவில் அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டியிருக்கிறது. அத்தேர்தலில் மீண்டும் நிக்சன் தேர்ந்தெடுக்கப்படுவாரா என்பது பற்றி அமெரிக்க மக்களுக்கே ஐயப்பாடாக இருக் கிறதாம்!

அடுத்து வருபவரும் கூட, அமெரிக்கா இது வரையில் கட்டிக் காத்துவந்த புகழை, கீழே போட்டு மிதிப்பவராக இருப்பார் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் அமெரிக்காவின் ஆதரவு என்பது "ஆற்று - மண் குதிரை" கதையாகத்தான் முடியும். சீனாவின் வாலாட்டமும், குழப்பிவிடும் போக்கும் மட்டுமே என்றென்றும் புட்டோவுக்குத் துணையாக வரமுடியும். எனினும்கூட, அந்தச் சிவப் புச் சீனாவுக்கு ஐ. நா வில் இடம்கொடுத்து விட்டிருப் பதனால், அதுவும் சிற்சில நேரங்களிலேனும் புற நிலைமைகள் பற்றிச் சிந்திக்கத்தான் வேண்டி யிருக்கும்.

எனவே, எதிர்காலத்தைப் பற்றிய சரியான கணக்கை புட்டோ, வகுத்துக்கொண்டு செயல்பட் டால் மட்டுமே தென்கிழக்காசியாவுக்கு நிரந்தர மான அமைதி இருக்க முடியும். இந்தியாவுக்கும் அமைதிச் சூழல் ஏற்பட முடியும்!

அந்த அறிவை புட்டோவுக்குத் தரவேண்டியது ஐ. நா. மன்றம்தான். அதுபோல் எத்தனை இன்னல் கள் வந்துற்ற போதும் அவைகளைக் கண்டு துவளாது, தொய்யாது, தூய இதயத்துடன், நம்பிக்கையுடன் செயல்பட வேண்டிய ஆற்றல் பெற்றிருப்பதனை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டியவர்கள் இந்திய மக்கள் ஆவர். ஃ

வங்க நாடே நீ வாழ்க!

புலவர். அரிமதி தென்னகன்

வங்க நாடே! உன்னை வாழ்த்துகிறேன்!! குருதி கொண்டே உன் வீர வரலாற்றை எழுதிய மான மறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறேன்!!

விடுதலை நாடே! ஆணவ 'யாகியா'வால் சுற்றப்பட்ட அடிமை விலங்கை உடைத்தெறியும்பணியில் ஈடுபட்டு உயிரைஈந்த உண்மைத் தெய்வங்கட்கு எந்தப் படையலை வைப்பது என்று புரியாமல் விழிக்கிறேன்.

எந்த சொற்களால் புகழ்மாலை தொடுப்பது என அறியாமல் திகைக்கிறேன்!!

"அம்மா தமிழே! உலகேத்தும் வீர மறவர்களைப் பாராட்டும் சொல்லை நீகூடவாப் பெறவில்லை" என்று என் அன்னைத் தமிழிடம் கேட்டு அங்கலாய்த்துக் கொள்ளுகிறேன்.

ஓ, வங்கநாடே! உன்னுடைய தோற்றம் உலகிற்கு ஒரு புதிய கொள்கையைத் தந்துவிட்டது. நீ பெற்றளித்த அந்தப் புரட்சிப் பிள்ளையை இனி எவராலும் வாழ்த்தாமல், வரவேற்காமல் இருக்க முடியாது!!

அதற்காக உனக்கு என்றென்றும் நன்றி கூறுவேன்;

மதம், ஒற்றுமைக்கோ, ஒருமைக்கோ நிலையான வழி வகுக்காது என்ற தெளிந்த உண்மையினை உணர்த்திய ஒளிச் சுடர் நீ!! நீ தந்த ஒளி, ஆதிக்க இருட்டை அழிக்கும் பணியில் ஈடுபடுவோர் விழிக்கு வலிவூட்டும்!!

வலிவூட்டப் பெற்ற கோடிக் கணக்கான விழிகளிலே என் இரண்டு கண்களும் இடம்பெறும் என்றால், அந்த விழிகளுக்குரியவன் உன்னை வாழ்த்துவதில் வியப்புண்டா?

எந்த அணுகுண்டுப் படையாலும், ஆணவ சக்தியாலும், ஆதிக்கவெறியாலும் தகர்க்கமுடியாத எஃகுக்கோட்டை மொழியுணர்வே என்னும் உண்மைக்கு உன்னைவிட வேறு சான்று எங்களுக்குக் கிடைக்காதே.

ஓ, புதிய நாடே! புரட்சி மண்ணே! கிடைப்பதற்கரிய வரலாற்றுச் சான்றாகக் கிடைத்த உனக்கு எப்படி நான் நன்றி சொல்வேன்!!

இனவுணர்வின் எழுச்சிச் சின்னமே! உன்னை இப்படி அழைக்கும் போது வங்க நாடே! என் உடல் அணுவொவ்வொன்றும் சிலிர்க்கிறதே அது ஏன்? என் குருதி நாளங்கள் எல்லாம் குறுகுறுக்கின்றனவே, எதனால்? என் விழிகளில் மகிழ்ச்சிக் கண்ணீர் வெளிவரத் துடிக்கின்றதே என்ன காரணம்?

ஓ, சிங்கத் தாயகமே! சிரிக்கும் திராவிடமே! உணர்ச்சிக் கூடே! உயிர்க்கஞ்சாதோர் கூடிக்களிக்கும் வீடே! உன் வெற்றி என் வெற்றி யென நினைத்து நிமிர்கிறேனே எதனால்?

என்னைப் பார்த்து நீ உதிர்க்கும் புன்சிரிப்பை என்னால் உணர முடிகிறது!! அதன் பொருளை நான் உணர்வது உண்மையானால், என் கேள்விகளுக்குரிய பொருளை, என் வியப்பில் பொதிந்துள்ள கருத்தை நீயும் உணர்வாய் என்பதும் உண்மைதானே!!

ஆமாம்!! இதைத்தானே பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள்!!

ஓ, வங்க நாடே! கோடி மலர்கள் கொடுக்க முடியாத குளிர்ச்சியை உன்னால் நான் அடைகிறேன் காரணம், நீ ஒரு புரட்சிப் பூ! கோடி நிலாக்கள் கொடுக்கமுடியாத கற்பனை உன்னிடமிருந்து நான் பெறுகிறேன். காரணம், நீ குருதிக் கடலில் குளித்தெழுந்த புதுமை நிலா!!

ஓ, புரட்சிப் பாட்டே! உன்னைப் பாடிப்பாடி மகிழ்கிறேன்; உன்னிடம் பொருளைத் தேடித் தேடிக் களிக்கிறேன். அப்போதும் என் ஆவல் அடங்கவில்லை.

ஓ, எழுச்சி முழக்கமே! கழுத்து நரம்புகள் புடைத்தெழ, மார்புக் கூடு விம்ம, பிளந்தெடுத்த அடுப்பு விறகாம் தோள்கள் உயர உன்னைச் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன். ஆனாலும் வெறி அடங்கவில்லை.

ஓ, வெற்றித் தேனே! உன்னைச் சுவைத்துச் சுவைத்துப் பார்க்கிறேன், என் கைப்பிடியளவு இதயம் 'இன்னும் கொடு, இன்னும் கொடு' என்று ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

"என்னடாப் பொடியா! என்னையே பாராட்டுகிறாயே, என் தலைவனை மறந்துவிட்டாயே" என்கிறாயா?

அய்யோ... அய்யோ...!! இவ்வளவு நேரமாக உன்னையா நான் பாராட்டினேன். அந்த மறக்குல மன்னனைத்தானே பாராட்டினேன்!! உன்னை அவனாகக் காண்பதில்தான் அவன் சிறப்பே அடங்கியிருக்கிறது!! அவனை நீயாகக் காண்பதில் தானே உன் பெருமையே சிறப்படைகிறது!!

ஏன்?

அவன் வேறு, நீ வேறா? நீ வேறு அவன் வேறா? அவனில் நீ; உன்னில் அவன்!!

சிலையில் கலையைக் காண்பவனா நான்; இல்லையே; சிலையில் சிற்பியைத் தான் நான் காண்பேன்.

சிற்பியைக் காணும்போது அவன் திறமையைப் பிரித்துக் காணும் சிந்தனையே எனக்குக் கிடையாதே.

சிற்பியைச் சிலையாகக் காண்பவன் தான் நான்!!

நெருப்பைத் தின்று வளர்ந்த குருதிப் பூவே! உன்னைப்பற்றி ஒரு காவியமே எழுதத் துடிக்கிறேன்.!

எப்போது எழுதுவாய் என்கிறாயா?

என்றாவது ஒரு நாள்...

எப்படியும் எழுதுவேன்.;

எங்கிருந்து எழுதுவேன் என்பதை மட்டும் சொல்ல முடியாது.

காலத்தின் கட்டளைதான் அதைச் சொல்ல வேண்டும்!!

ஆனால், ஒன்று மட்டும் உறுதி!

'விடுதலைக் காவியம்' மட்டும் என்னிடமிருந்து உருவாகியே தீரும்.

உறுதியாக, அந்தக் காவியத்தை உனக்குத்தான் காணிக்கையாக்குவேன்.

வாழ்க நீ!

வளர்க நீ!!

வெல்க நீ!!

*

சோழமாதேவி

ராஜிமணாளன்



[37]

பாசி படர்ந்தது பளிங்குச் சிலையில்!

சூளங்கணியமித்தி போரில் கமணன் தோற்றுப்போன தற்கு, அவனது மனத்தில் தனது சகோதர னுடனேயே போர் புரியவேண்டியிருக்கிறதே என்ற ஆழ்ந்த கவலை வேர் விட்டிருந்ததால் ஏற்பட்ட சோர்வு மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது.

தீகவாபியில் கைது செய்யப்பட்டு, சிறையிடப் பெற்று விட்டதாகக் கிடைத்த செய்தியினைத் தொடர்ந்து, விகாரதேவியை விடுவிக்கக் கோரி, தூது அனுப்பப்பட்ட படைத்தளபதி சூரநிமிலன், எதிர்ப்புப் படையெடுப்பில் கலந்து கொள்ளாமல் போய்விட்டதும், அதைவிட, கமணனுக்கு இதய வலிவுபோன்று தெம்பூட்டிக் கொண்டிருந்த நந்தி மித்திரனும் தம்பனைக்கு அனுப்பப்பட்டுவிட்டதால், அவனது உதவியும் கிடைக்காமல், கையும் காலும் இழந்த முண்டம் என்ற நிலையில் ஒரு போரை நடத்த வேண்டியிருந்ததும் தான் உண்மையான தோல்விக்குக் காரணம் என்று யார் வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளலாம்! ஆனால் முதலமைச்சர் காசியபரது உள் மனம், தான் படைவீரர்களுக் கிடையே, கமணனைப்பற்றித் தூவிவிட்ட தவறான கருத்தால், அந்த வீரர்களது முழு ஒத்துழைப்பும் அவனுக்குக் கிடைக்காமற் போனதுதான் காரணமாக இருக்கவேண்டும் என்று எண்ணிப் பார்த்துக்கொண் டிருந்தது.

தலைநகரைவிட்டு, மீண்டும் கமணன் ஓடிப்போன பிறகு, தான் அடுத்து என்ன செய்யவேண்டும் என்ற குழப்பத்தில் தவித்துக்கொண்டிருந்தார் காசியபர். அப்போதுதான் தீகவாபிக்குச் சென்று திரும்பிய சூரநிமிலன் முதலமைச்சரைச் சந்திக்க அங்கு வந்து சேர்ந்தான். அவனது மனத்தடத்தில், கமணனது தோல்வி பற்றிய அதிர்ச்சியும், தான் திரும்பி வரும் வரையில் காத்திராதது குறித்தோ அல்லது, தான் உடனே திரும்பி படைத் தலைமையேற்கவேண்டும் என்று அறிவிப்புக் கொடுக்காதது குறித்தோ, பல்வேறு காரணங்கள் உதயமாகி, அவை ஒவ்வொன் றும் கமணன்மீது ஆத்திர உணர்ச்சியை அதிகப் படுத்திக் கொண்டிருந்தது.

தளபதியைக் கண்டதுமே, காசியபர், "தேவியின் விடுதலை என்ன ஆயிற்று?" என்றார். தனது ஆத்தி ரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, "தேவியாரை விடுதலை செய்து, கல்யாணிக்கு அனுப்பி வைத்து விட்டுத்தான், தீசன் போர்க்களமே புகுந்தானாம்!" என்றான் சூரநிமிலன். "அப்படியானால் நீ தேவி யாரைப் பார்க்கவே இல்லையா? இத்தனை நாட்கள் என்ன செய்தாய்?" என்றார் சற்றுக் கோபமாக.

"தீகவாபிக்குச் சென்று, அங்கே தீசனின் விருந் தைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்துவிட்டு, இப்போதுதான் வருகிறேன் அமைச்சரே!" என்றான், இகழ்ச்சியாக. அவன் எந்தக் கருத்தில் அப்படிச் சொல்கிறான் என்பதை நன்றாகப் புரிந்துகொண்டா லும், முதலமைச்சர், "நல்லதே செய்து விட்டிருக் கிறாய்! இல்லையானால், இந்தத் தோல்விக்கான கார ணம் முழுவதும் உன்னைச் சார்ந்துவிட்டிருக்கும்! என்று கூறி எழுந்து வந்து அவனது அருகே நின்று முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார்.

தூக்கி வாரிப்போட்டது சூரநிமிலனுக்கு. முத லமைச்சர் எந்தக் கருத்தில் அப்படிச் சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள அவனால் முடியவே இல்லை. "நீங்கள் சொல்வது......" என்று அவன் எதையோ சொல்லத் தொடங்கும்போது காசியபர் குறுக்கிட்டு, "சரியாகத்தான் சொல்லி இருக்கிறேன். அது இருக் கட்டும். நீ உடனே கல்யாணிக்குப் புறப்படு. தேவியை அழைத்துக்கொண்டு வா!" என்று உத்திர விட்டார்.

"இப்போது இந்த அரண்மனையும், இங்குள்ள பொருள்களும் தீசனுக்குச் சொந்தமானவை அல் லவா! நாமெல்லாம் அவனது கைதிகள் ஆகவேண்டி யவர்கள் அல்லவா? இந்த நிலையில் தேவியாரை இங்கே அழைத்துக்கொண்டு வருவது நல்லதல்லவே!" என்றான் தளபதி.

"ஓ, நான் அதுபற்றி மறந்தே போய்விட்டேன். யோசிக்கவே தவறி விட்டேன். தளபதியாரே, கமணனை வெற்றி கொண்ட, தீசன், இதுவரையில் இங்கே வருகை தரவில்லையே ஏன்?" என்றார்.

"எனக்கு மட்டும் எப்படித் தெரியும் அமைச்சர் அவர்களே! விரைவில் இங்கே அவன் படையுட னேயே வரக்கூடும் என்றே நம்புகிறேன்!" என்றான்.

"அப்படியானால், நாம் அனைவருமே இந்த இடத்தைவிட்டுத் தப்பிவிடுவதுதான் நல்லது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" எனக் கேட்டார் காசி யபர். சூரநிமிலன் சிரித்துக்கொண்டு, "அமைச்சர் அவர்களது கருத்தை, எனது எண்ணமாக இருக்க லாமா என்று வினவாக்கிக் காட்டுகிறீர்களா அமைச் சரே! நான் தப்பிச்செல்ல விரும்பவில்லை" என்றான் துடுக்காக.

"அப்படியானால், நாம் யாருமே தப்பவேண்டிய அவசியமில்லையே!" என்றார் காசியபர்.

"எல்லோருமே தப்பிவிட வேண்டிய அவசியம் இப்போது என்ன வந்துவிட்டது" என்ற குரல்கேட் டுப் பின்னால் திரும்பிப் பார்த்தனர் இருவரும். அவர் களுக்குப் பின்னாலிருந்து விகாரதேவி வந்துகொண் டிருந்தாள். அவளைக் கண்டு இருவருமே திகைத்து விட்டனர்!

மகாகாமா அரண்மனையை விட்டுப் போன

இந்த இடைக்காலத்தில், தங்கள் அரசிக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாக, அவர் களைத்து, இளைத்துப் போயிருக்கக்கூடும் என்று எண்ணிக் கொண்டிருந்ததற்கு மாறாக, விகாரதேவி, முன்னைப் போதையும்விட, மதர்ப்புடன், செழிப்புடன் காணப் பட்டது கண்டு வியந்தனர். இதற்கேதேனும் தனிக் காரணம் இருக்கக்கூடும் என்று எண்ணிக் கொண் டிருந்தபோது விகாரதேவியே பேசினாள். "என்ன அமைச்சரே இப்படித் திகைத்து நிற்கிறீர்கள்! நான் தானா என்று சந்தேகப்படுகிறீர்களா என்ன! இன்றும், இனியும் என்ன நடக்கப்போகிறது என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. நான் எது குறித்தும் கவலைப்படாமல் இருக்கத் தெரிந்துகொண்டு விட் டேன். அதனால் இப்படி! அது சரி, அமைச்சரே, தப்பி ஓடுவது பற்றிப் பேசிக்கொண்டீர்களே, என்ன விஷயம்?" என்றாள்.

தங்கள் அரசி எல்லாவகையிலும் ஒரு தேவதை யாக இருக்கிறாள் என்றெண்ணிக் கொண்ட சூர நிமிலன், "ஒன்றுமில்லை தேவி! போரின் பின் விளைவு கள் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம்—அவ் வளவுதான்" என்றான்.

"ஓ, கமணனது தோல்வியைப் பற்றிப் பேசிக் கொண்டீர்களா?" என்று கேட்டு, மெள்ளச் சிரித்து விட்டு "இனி அதுபற்றி யெல்லாம் வீணாகப் பேசிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இனி தீசன் கமணனை எதிர்க்கமாட்டான்! இந்த அரண்மனையைக் கைப் பற்றவும் கருதமாட்டான்!" என்று கூறிவிட்டு, ஒரு இருக்கையில் அமர்ந்துகொண்டாள்.

"அதெப்படி தேவி, அவ்வளவு உறுதியாக அதனைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் காசியபர்.

"நிலைமைகள் எனக்குப் புரிகின்றன — அதனால் தான்" என்று சொல்லிவிட்டு, இருவரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, மெள்ள புன்னகை ஒன்றை உதிரவிட்டார். உடனேயே, "என்ன அமைச்சரே, புரியவில்லையா?" என்று கேட்டு நிறுத்தினாள்.

அசடு வழிய நின்ற இருவரையும் பார்த்து, விகாரதேவி, "தீசன் என்ற ஒரு இளைஞனை, பெரும் புகழும் படைத்த ஒரு பேரரசி, நேரில் வந்து சந்தித் திருக்கிறாளே — உங்களுக்குத் தெரியாதா?" எனக் கேட்டாள்.

தம்பளைக்குச் சென்றிருந்த நந்திமித்திரன் ஏமாற்றத்தோடு திரும்பிக் கொண்டிருந்தான், அந்த இடத்துக்கு. அவன் அந்த இடத்துக்கு வரும்போது, தீசனை, சோழமாதேவி சந்தித்தார் என்று விகார தேவி சொன்னது தெளிவாகக் கேட்டது அவனுக்கு.

அந்த வார்த்தைகளை வைத்து சிலம்பம் ஆடிக் கொண்டே வந்து நின்றான் விகாரதேவியின் அருகில். அவனைக் கண்டதும் அரசி, "நீ கூட இந்தப் போரின் போது, இந்தத் தலைநகரில் இல்லாமற் போய்விட் டாய் என்பது கேட்டு நான் வருத்தப்பட்டேன் நந்தி மித்திரா!" என்றாள்.

அரசி என்ன சொல்கிறாள் என்பதிலே அவன் கருத்துப் பதியவில்லை. தம்பளையிலே தனக்குக் கிடைத்த ஏமாற்றத்தைவிட, மகாகாமாவில், தனது ஓய்வு விடுதியில் ஏற்பட்ட ஏமாற்றத்தால் அவன் பதறித் துடித்துக் கொண்டிருந்தான். ஆமாம், இரத்தினா என்ற பேரழகுப் பெட்டகத்தையும் அப்போது அவன் இழந்துவிட்டிருந்தான். திரும்பி வந்த அவனுக்கு, அவள் விடுத்துச் சென்றிருந்த ஒரு ஓலைதான் எஞ்சியிருந்தது. ஓலையில் கண்டவைகளை மறுபடியும் ஒருமுறை மனதுக்குள் அசை போட்டுக் கொண்டான்.

அன்பரே,

ஏமாந்துத் திரும்பும் உங்களுக்கு இன்னொரு ஏமாற்றம் என்றால் உங்களால் ஏற்க முடியாது என்பது எனக்குத் தெரியும். என்றாலும் என்ன செய்வது? நான் தப்பிச் செல்லவேண்டும் என்ப தற்காகத்தானே இங்கே ஒரு படையெடுப்பே நடந்தது? அந்த வாய்ப்பை நான் நழுவ விட லாமா? நீங்கள் பெருவீரம் படைத்தவர்கள் என்று பேசிக்கொள்ளுகிறார்கள். அது எனக்கு மெய்ப்பிக்கப்பட வேண்டும். ஆமாம், நீங்கள் என்னை அனுராதபுரம் அரண்மனையிலிருந்து சிறையெடுத்துச் சென்று, கடிமணம் புரிந்து கொள்ள வேண்டும்—முயன்று பாருங்களேன்!

—இரத்தினா.

—என்று எழுதிவைத்து விட்டுத் தப்பிவிட்டாள். இரத்தினா குறிப்பிட்டதுபோல அந்த ஏமாற்றத்தை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லைதான்! அந்த ஆத்திரத்தோடு, அரண்மனைக்குள் நுழைந்தபோது தான், தீசனை, சோழதேவி சந்தித்தாள் என்று விகாரதேவி சொல்லிக்கொண்டிருந்தாள். நந்தியும் அதனைத் தொடர்புபடுத்தி ஏதேதோ கற்பனையில் மூழ்கிக் கொண்டிருந்தான்.

தேவியின் வினாவுக்கு அவன் பதில்கூட சொல் லாமல், ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அவன் ஏதோ பலமான திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறான் என்று அமைச்சரும், தளபதியும் நினைத்தனர். ஆனால் விகாரதேவி, மீண்டும் அவனைப் பார்த்து, "நந்திமித்திரா—திட்டங்களை, கலந்து பேசி

உருவாக்கலாமே!" என்ருள்.

புறஉலகுக்கு இழுக்கப்பட்ட நந்திமித்திரன், "என்ன தேவி சொன்னீர்கள்?" என்ருன் பதட்டத்தோடு. விகாரதேவி, தான் சொன்னதை மறுபடியும் சொன்ஞள். "ஆமாம் தேவி! சில திட்டங்களை நாம் அனைவருடனும் கலந்து பேசி உருவாக்கத்தான் வேண்டும்! சிலவற்றை நான் மட்டுமே தனித்து உருவாக்க வேண்டும்!" என்று கூறினுன்.

அதன் பின்னர், தம்பலையில் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் குறித்தும், போர்க் கருவிகள் எப்படி அனுராதபுரம் படைகளுக்குச் சொந்தமாயின என்பது குறித்தும் விளக்கமாக எடுத்துக் கூறிவிட்டு, விஜிதபுரம் போய்ச் சேருமுன், தீசன் படையெடுப்பு பற்றிக் கேள்விப்பட்டு உடனே திரும்பியதாகக் கூறி, இனி என்ன செய்வது என்பது பற்றிக் கேட்டான்.

வெகுநேரம் வரையில் அனைவரும் இது பற்றியே கலந்துரையாடிக் கொண்டிருந்து, இறுதியாக, மீண்டும் கமணனை வரவழைத்து, மகாகாமாவிலிருந்தபடியே மறுபடியும் போர் தொடுப்பது என்ற திட்டத்தை வகுத்துக்கொண்டு கலைந்தனர்.

அரசியார் திரும்பிவந்து சேர்ந்தது குறித்து அரண்மனையே மகிழ்வில் திளைத்தது.

*   *   *

பொதுத் திட்டத்தை உருவாக்கிவிட்டு, இருக்கை சேர்ந்த நந்திமித்திரன், தன் தனித் திட்டம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினுன்.

சோழப் பேரரசியும், வீரபாகுவும் எதற்காக தீசனைச் சந்திக்க வந்திருக்கிருர்கள்? என்பதற்குச் சரியான காரணம் கிடைக்கவில்லை. ஆனுல், அவர்களது சந்திப்புக்குப் பிறகு, தீசன், கமணனை தொடர்ந்து சென்று தாக்கவில்லை. எனவே, இந்தச் சந்திப்பு அரசியல் தொடர்பானதாகத்தானிருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டான். அந்த அரசியல் பின்னணி என்னவாக இருக்கும் என்பதிலே தெளிவு பிறக்கவில்லை நந்திக்கு. என்ருலும், இந்தச் சந்திப்பு தொடர்பாக உலகுக்கு வியக்கத்தக்க, விபரீதமான ஒரு செய்தியைத் தந்துவிட வேணடும் என்று முடிவுகட்டிக்கொண்டது அவனது மனம்.

*   *   *

சூளங்கணியமித்தி என்ற சிற்றூரில் முகாமிட்டிருந்த தீசனை, சோழப் பேரரசியும், வீரபாகுவும் சந்தித்து, போரின் கொடுமையையும், சகோதரச் சண்டையின் இழிவுத் தன்மையும் எடுத்துச் சொன்ன போது, தீசன், "என்னையே கொன்ருெழிக்கத் திட்டம் தீட்டி இருந்தான் கமணன்" என்று விளக்கம் தந்தான். அவையெல்லாம் வெறும் கற்பனைகளே என்றும், கமணனது திட்டங்கள் யாவும், அனுராதபுரத்தை அழிப்பது என்பதுதான் என்றும், அவனது இடத்திலிருக்கும் எல்லோருமே அப்படித்தான் செயல்பட முடியும் என்றும் விளக்கி, கமணனுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டிய நேரத்தில், எதிர்த்துப் போராடுவது என்பது எதிரிகளுக்குச் சாதகமாகிவிடும் என்பதை விளக்கினுர் சோழதேவி.

சோழப் பேரரசையே ஒழிக்க, தான் தன் சகோதரனுடன் ஒத்துழைப்பதுதான் முறை என்ற தத்துவத்தை, தொடர்புடைய சோழப் பேரரசியே எடுத்துக்காட்டுவது என்ருல்... தீசன் திகைக்காமல் இருக்கமுடியுமா? வியப்புக்கலந்த ஒரு வேதனை அவனுள் படரத் தொடங்கிவிட்டது.

தமிழர்கள் எத்தனை நல்லவர்கள்? அவர்களது போர்ப்பண்பு எவ்வளவு உயர்வானது? தமிழர்கள் மீதும், எள்ளாளச் சோழப் பேரரசர்மீதும் தன் தந்தை உயரிய மதிப்பு வைத்திருந்ததற்கு இந்தப் பண்பாடுகள்தான் காரணமா? அன்ருெர்நாள், தமிழர்களுக்கு எதிராகப் போர்புரிவதில்லை என்ற வாக்குறுதியைக் கேட்டாரே, தன் தந்தை, அதற்கு இந்த உயரிய பண்பாடுதான் பிறப்பிடமா? எதிரிகளையும் எத்தனை அன்புடன் நேசிக்கிருர்கள் இந்தத் தமிழர்கள்?

தீசன் குழம்பித்தான் போனுன், உண்மையில்! ஓடிப்போன கமணனைத் தொடரவேண்டியதில்லை; அப்படியானுல் அடுத்து? முடிவெடுக்க முடியவில்லை அவனுல்.

சோழப் பேரரசி தியாகவல்லி தேவியாரையும், வீரபாகுவையும் தீகவாபிக்குத் தன்னுடன் வரும்படிக் கேட்டுக்கொண்டான். இருவரும் உடன்பட்டனர். பாதுகாப்பாக, சகல மரியாதைகளுடனும் அழைத்து வரும்படிப் பணித்துவிட்டுப் போய்விட்டான் தீசன், தீகவாபிக்கு.

இதற்கப்புறம்தான் நந்திமித்திரனின் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன—சோழதேவியைப் பற்றி விசித்திரமாக! விபரீதமாக!

*   *   *

படையெடுப்பு நேரத்தில், மகாகாமாவில் ஏற்பட்ட அல்லோலகல்லோலத்தைப் பயன் படுத்திக் கொண்டு மிக எளிதாகத் தப்பிவிட்ட இரத்தினு, அனுராதபுரம் வந்து சேர்ந்தபொழுது அவளை எதிர் கொண்டழைக்க, சோழதேவி வரவில்லை என்று கண்டு கலங்கினுள் கள்ளவிழிகள் அந்தப் பகுதி முழுவதையும் துழாவிக்களைத்தன, 'மகளே' என்று வாரியணைத்துக் கொண்ட எள்ளாளர், "நீ பத்திரமாகத் திரும்பி

சுவைத்ததைச் சொல்கிறோம்

5—12—'71 இதழ் கண்டேன். களிப்பு மிகக் கொண்டேன், ஆசியாவுக்கு அமைதி உண்டா என்ற தலைப்பில் வெளி வந்த தலையங்கம் வெகு அருமை! 'வடமொழியருச்சனையில் ஓதப்படுவன எல்லாம் அருள் பெற்ற சான்ருேர் ஆக்கியன அல்ல' என்பதைத் தக்க ஆதாரங்களோடு விரிவாக எடுத்துக் கூறியுள்ள டாக்டர் முத்து நமச்சிவாயம் அவர்களின் 'தமிழ்ப்போற்றி' மொழிக் கட்டுரை சிந்தனையைத் தூண்ட வல்லது. இதழில் இடம் பெற்ற மூன்று கவிதைகளும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. இம் மலர் தேன்போல் இனித்தது.

இராம. இரவிப்பிரகாஷ், ஒசூர்

பொடியனின் புதுக்கருத்து
பொய்யரின் இடுப்பொடித்து
வடிவினில் வாய்துடுக்கை
வாட்டிடும் நற்கருத்து!
நடித்திடும் நாய்களெல்லாம்
நரம்புகள் நலிந்துசாக
படிப்பவர் புரட்சிசெய்ய
பாங்கவர் பைங்கருத்து!

இலக்கியன், ஆலங்காயம்

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவோ நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலேகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலே...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் : சென்னே-8

வந்தாயே, அதுபோதுமம்மா'' என்ருர். "அந்தமிருகத்தால் உனக்கு...'' என்று கேட்குமுன்னர் இரத்திஞவே "நான் சாமார்த்தியமாகத் தப்பிக் கொண்டேன் அப்பா! அவன் பலவந்தம் செய்யும் வகையில் சில சமயம் முயன்ருலும், முரட்டுத்தனமாக நடந்து கொள்ளவில்லே'' என்று கூறியதுகேட்டு எள்ளாளரும் முத்துமுடியாரும், வியப்படையவே செய்தனர்.

கூம்பிய முகத்தோடு, ஒருபக்கத்தில் தளபதி தியாகராயர் நின்றுகொண்டு எதையோ எண்ணிக் கொண்டிருந்தார். சோழப் பேரரசியுடன் தன்னேயே ரோகணரடாவுக்கு அனுப்புவார் மன்னர் என்று கோட்டைகட்டி வைத்திருந்தவர் அவர். தனக்குப் பதிலாக வீரபாகு அனுப்பப்பட்டான் என்றதும், சோழப் பேரரசின் மீதே ஒருவகையான வெறுப்புப் படர்ந்த நிலேயில், எந்த ஒன்றின் மீதுமே ஒரு பற்றும் பாசமும் பிடிப்பும் அற்ற நிலேயில், கடமைக்காக வாழ்கிருேம் என்ற உணர்வில், சாவை எதிர்பார்த்துக் காத்திருப்பவர் போலக் காணப்பட்டார் தியாகராயர்.

"அம்மாவைக் காணுேமே அப்பா!'' என்று கேட்ட இரத்திஞவின் கேள்வியைத் தொடர்ந்து அரசர், தியாகராயர்மீது ஒரு பார்வையைத் தெளித்துவிட்டு, "உன் தாய் ரோகணுவுக்குச் சென்றிருக்கிருள் இரத்திஞ! சமாதானத் தூதுக்காக'' என்று கூறிவிட்டு, அவளே அழைத்துக் கொண்டு, அந்தப்புரத்துக்குள் நுழைந்தார்.

மன்னர் அகன்றதும், முத்துமுடியார், தியாகராயரை நோக்கி, "தளபதியாரே! நீங்கள், பலவிதமான ஏமாற்றங்களுக்கு ஆளாகி இருக்கிறீர்கள் என்பதை நான் அறியாதவனுக இல்லே. என்ருலும், நீங்கள் தெளிவாக ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த ஏமாற்றங்களால் உங்களுக்கென்று தனிப்பட்ட முறையில் எந்த இழப்பும் ஏற்பட்டுவிடவில்லே. தேவையற்ற முறையில் நாம் எந்த ஒன்றைப் பற்றியும் கற்பனே செய்துகொண்டு, அந்த கற்பனேகளுக்காக ஏங்குவதனுலேயே பல சந்தர்ப்பங்களில் துன்பப்படுகிருேம். கற்பனேகள் என்பதற்கும், சிந்தனேகள் என்பதற்கும் வேறுபாடுண்டு என்பதை அறிவீர்களே!'' என்று நிறுத்திஞர்.

ஆத்திரமடைந்த தியாகராயர், "ஒரு முட்டாளுக்குப் பட்டாளத் தலேமை தந்திருக்கிறீர்கள் என்ரு அமைச்சரே நினேத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்ருர் பட்டென்று.

"இனிமேல் அப்படி நினேக்கும்படியாக நீங்கள் நடந்து கொள்ளக் கூடாது என்பதற்காகத்தானே இவ்வளவும் சொல்கிறேன்'' என்ருர் முதலமைச்சர், சூடாக! தொடர்ந்து, "தளபதியாரே! இரத்திஞ, நந்திமித்திரனே ஏமாற்றித் தப்பி வந்திருக்கிருள், மகாகாமா அரண்மனேயில் கமணனேத் தவிர, விகார தேவி உட்பட அனேவரும் ஒன்று கூடிவிட்டார்கள். நம் பேரரசியாரின் திட்டப்படி, இப்போது போர் தடுக்கப்பட்டுப் போனுலும், விரைவில், கமணன் திரும்பி வந்து மீண்டும் தீசனே எதிர்ப்பான். அல்லது, நம்மீது பாய்வான். மிகவிரைவிலே இது நடைபெறத்தான் போகிறது, இந்த நேரத்தில் நீங்கள் ஒரு கற்பனே உலகில் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறீர்கள். ரோகண ரடாவுக்கு, தேவியின் பாதுகாப்புக்கு நீங்களே போகவேண்டும் என்று நீங்கள் முதலில் நினேத்ததே தவறு! அதன் எதிரொலியாக உணர்ச்சிவயப்பட்டு நீங்கள் உங்களேயே வருத்திக்கொள்வதும் தவறு! முருக பூபதியின் உயிருக்கு விலேயாக நந்தி

மித்திரனது தலையைக் கொய்யக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் நெருங்கிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் அந்த இடத்திலிருந்து விலகிப் போய்க்கொண்டிருக்கிறீர்கள். மேனிவிடங்கன் அந்த இடத்துக்கு நெருங்கி வந்துகொண்டிருக்கிறுன். இது யாருக்கும் நல்லதல்ல! 'சிந்தித்துப் பாருங்கள் தளபதியாரே!' என்ருர்.

மேனிவிடங்கனைப் பற்றி அமைச்சர் எடுத்துக் கூறியதும், தீயை மிதித்து விட்டவர்போல் தளபதியார் துள்ளி, தனது உடை வாளை உருவிக்கொண்டு, 'அமைச்சர் அவர்களே, இந்த உடைவாளுக்கு, முதலில் மேனிவிடங்கனது குருதியைக் குடிக்கும் பேறு கிடைத்துவிடக்கூடாது என்பதற்குப் பிரார்த்திக் கொள்ளுங்கள்!' என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாக நடக்கத் தொடங்கினுர்.

அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, முதலமைச்சர் முத்து முடியார், "தமிழத் தாயே! இந்தத் தமிழ்ப் பேரரசை நீதானம்மா காப்பாற்ற வேண்டும்" என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே, அவரும் தமது இருக்கையை நோக்கி நடக்கத் தொடங்கினுர்.

ஃ ஃ ஃ

ஒரு கிழமை கழிந்தது.

அந்தி மயங்கிக்கொண்டிருந்தது. இரவைத் தழுவிக்கொண்டிருந்தது பகல் வேளை.

அரசி தியாகவல்லி தேவியாரின் அந்தப்புரத்து மலர்ச் சோலையில் நிலா முற்றத்தின் மாடத்தில் அரசர் எள்ளாளச் சோழரும், இரத்தினுவும் அமர்ந்து, ரோகணுவுக்குச் சென்ற தேவியிடமிருந்து தகவல் எதுவும் கிடைக்காதது குறித்துக் கவலையுடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

போரில் கமணன் தோற்று ஓடிவிட்டாலும் துரத்திச் சென்று தீசன் அவனை எதிர்க்காததற்குத் தன் தேவியே காரணமாக இருக்கவேண்டும் என்று அரசர் யூகித்து வைத்திருந்தார்.

முதலமைச்சர், தளபதியிடம் எடுத்துக் காட்டியது போல ரோகணுவின் தற்போதைய நிலைபற்றியும், அது அடுத்து என்ன செய்யக்கூடும் என்பது பற்றியும் அவர் முடிவுக்கு வந்திருந்தார்.

தளபதி தியாகராயரின் போக்கு அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. போர்க்காலச் சூழ்நிலையில், ஒரு நாட்டின் தளபதி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கூட சிந்திக்காமல், உணர்ச்சி ஒன்றுக்கே இடமளிப்பவராகத் தியாகராயர் இருப்பதனுல், விளைவு விபரீதமாக ஆகிவிடக் கூடும் என்று எண்ணி, அவரை, சரியான வழிக்குத் திருப்ப என்ன செய்யவேண்டும் என்று யோசித்தார்.

அந்த யோசனையில் அவர் ஒரு முடிவை எட்டிப் பிடிக்கும் முன்பு, இரத்தினு "என்ன அப்பா, யோசிக்கத் தொடங்கி விட்டீர்கள்?" என்று கேட்டாள் குழைவாக. "ஆமாம் இரத்தினு! தீவிரமாகத்தான் சிந்திக்கவேண்டியிருக்கிறது. நீ அரண்மனைக்குப் போ! நான் கொஞ்சநேரம் இங்கே தனியாக இருக்க வேண்டும்" என்று கூறினுர் மன்னர்.

அவர் ஏதோ மிக முக்கிய விஷயம் ஒன்றைப் பற்றிச் சிந்திக்கிறுர் என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, 'வருகிறேன் அப்பா!' என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்ருள்.

அவள் அகன்றதும், மன்னர் மீண்டும் சிந்தனையில் மூழ்கினுர். நிலா மாடத்தை விட்டுக் கீழிறங்கி சோலையின் குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டே சிந்தித்தார்.

முற்றிலுமாக இருள் கவ்விக்கொண்டிருந்தாலும் கீழ்வானத்தில் அரைவட்டமாக நின்றுச் சிரித்துக் கொண்டிருந்த வான்மதி, இலேசாக ஒளிப்பிழம்பைக் கக்கிக்கொண்டிருக்கத்தான் செய்தது.

நடை பழகிக்கொண்டிருந்த மன்னர், சோலையின் ஒரு மருங்கில் உள்ள வெண்தாமரைப் பொய்கையின் அருகே வந்து நின்று, ஒருமுறை வான்மதியைப் பார்த்துவிட்டு, அது நீரில் நிழலாடிக்கொண்டிருந்த காட்சியையும், காற்றின் அலைப்பில் நீரின்மேல் அந்த வான்மதி அல்லாடிக்கொண்டிருந்த அழகையும்கண்டு ஒருமுறை மெள்ளச் சிரித்துக்கொண்டார்.

அந்தப் பொய்கையின் பளிங்கு மேடையின்மீது அமர்ந்து, மீண்டும் வானத்தை ஏறிட்டுப் பார்த்து. நிலவின்மீது பார்வையை நிலைகுத்தி வைத்து நிறுத்தி நீ என்ன பாவம் செய்தாய் நிலவே, உன்மீது இப்படிக் களங்கம் குடி கொண்டிருக்கிறது?" என்று வாய் விட்டுக் கேட்டார். நிலவுக்கு வாய் இருந்தால், "என் களங்கத்தைப் பற்றிக் கேட்கிறீர்களே அரசே! அங்கே ரோகணுவைப் பாருங்கள்— உங்கள் தேவியின்மீது களங்கத்தை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது" என்று பதில் சொல்லி இருக்கும்.

ஆமாம்! அதே நேரத்தில், நந்திமித்திரன் வகுத்த திட்டப்படி, தேவியின்மீது பழிசுமத்தி தீகவாபியில் சோழதேவி, தீசனுடன் காதல் விளையாட்டில் களித்திருக்கிறுள் என்ற அறிவிப்பை ஏந்திய ஓலையொன்று, அனுராதபுரம் அரண்மனைக்குள் நுழைவதற்காக வாயிலிலேயே காத்துக்கொண்டிருந்தது. ஒரு பரதேசி வடிவத்தில் வந்த போர்வீரன் ஒருவனிடம்!



விற்பனையாகிறது!

ஆசிரியர் மு. பி. பா. அவர்களின் அரிய படைப்பு.

விலை ரூ. 1-50

★ விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.

★ தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 1-75 பண அஞ்சல் செய்க.

கிடைக்குமிடம் :

முத்து நிலையம்,
65-அ, செட்டித் தெரு, காஞ்சிபுரம்-3.

வாழ்க வங்க நாடு!

புலவர் கோ. அண்ணாமலை

உலகம் தற்போதைக்கு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம். ஆம்; உலகு ஓர் பேராபத்தைக் கடந்துவிட்டது. வேறு வழியில்லாமல் பாகிஸ்தான் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டதையும் அதன் அதிபராயிருந்து உலகவரலாற்றில் ஒப்பற்ற கசாப்புக்காரன் என்ற விருதைப் பெற்றுத் துன்புற இருக்கும் யாஹ்யாகானின் பதவி விலகலையும் எண்ணி உலகு இப்போதைக்கு மகிழ்வெய்தலாம்!

டிசம்பர் மாதம் 3ஆம் நாள் வங்க விடுதலைப் படையின்-முக்தி வாஹினியின் — முன்னேற்றத்தையும் இந்தியப் படைகளின் எதிர்த் தாக்குதலையும் தாள முடியாமல் மேற்கே காஷ்மீர், பஞ்சாப், இராஜஸ்தான், குஜராத் ஆகிய எல்லைப் புற மாநிலங்களிலுள்ள நம்விமான தளங்களைத் தாக்கியது. தாக்கும் போதே ஐக்கிய நாடுகளின் நோக்கர்களிடம் இந்தியாதான் அப்படிச் செய்வதாகப் புளுகிவைத்தது. கிழக்கே சமாளிக்க இயலாமல் மேற்கே தாக்கிய பாகிஸ்தானின் தாக்குதலோடு சேர்ந்து ‘இந்தியாவின்மீது போர்’ என்று பாகிஸ்தான் ‘யுத்த பிரகடனம்’ செய்தது. இந்தப் போர் அறிவிப்பு வந்தபின் நடந்துள்ளவைகளால் இந்தியாவின் எதிர் காலத்துக்கும் உலகுக்கு வழிகாட்டும் உண்மைகள் சில தெளிவாகின்றன.

முதலில் தெளிவாகும் உண்மை-மதம் ஒன்று என்ற அடிப்படையின்மீதுமட்டும் ஓர் அரசு வாழ்ந்து விட முடியாது. மத உணர்வைத் தூண்டி ஒரு நாட்டு மக்களை மற்றொரு நாட்டின்மீது சினந்து எழச் செய்து மற்ற உணர்வுகளை அழித்துவிட முயலும் முயற்சி முடிவில் தோல்வியுறும் என்கிற உண்மையும் தெளிவாகிறது. அடிமைத்தளை ஒடித்து விடுதலை பெற இந்தியா முயன்றபோது பட்ட இன்னல்கள் விடுதலைக்குத் தர வேண்டிய விலை—எதுவும் இல்லாமல், மதத்தைக் காரணமாகக் காட்டி பாகிஸ்தான் கருக்கொண்டது. ஆனால் அது உருப்படியான உருக்கொள்ள அந்தக் காரணம் பயன்படவில்லை.

இரண்டாவதாகத் தெளிவாகும் உண்மை; அட்டூழியங்கள் கொடுமைகள் பொல்லாங்குகளின் கீழே மிதிபட்டு உழன்ற மக்கள் உள்ளத்தில் கனன்று எழும் விடுதலை வேட்கையைத் துப்பாக்கிக் குண்டுகளும் பீரங்கிச் சத்தங்களும், வல்லாதிவல்லர்களின் வரட்டு மிரட்டல்களும் எதுவும் செய்ய முடியாது என்கிற பழைய வரலாற்று உண்மை. வங்க நாட்டு மக்கள் தூசு படிந்து மங்கிக் கிடக்கும் இந்த வரலாற்று உண்மையைத் துடைத்து மாசு நீங்கிப் பளிச்சிட வைத்துவிட்டார்கள், தங்கள் தீரத்தால்!

அதோடுகூட பாகிஸ்தானத்தின் ஆட்சியாளர்கள் எவ்வளவு மூர்க்கத்தனமானவர்கள் - மூடர்கள் என்பதையும் தெளிவாக்கினார்கள். இந்தியாவின் மீது போர் என்று ‘பிரகடனம்’ செய்கிறார், யாஹ்யாகான்! எவ்வளவு சின்னஞ் சிறியவர்கள் நாங்கள், எவ்வளவு வலிமை குறைந்தவர்கள் நாங்கள், நாங்கள் ஏன் அவ்வளவு பெரிய நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டும்” என்று பாகிஸ்தானின் ஐ. நா. பிரதிநிதி அங்கலாய்த்துக் கொள்கிறார். ஆயிரம் காலத்துக்குப் ‘புனிதப் போர்’ —ஜிஹாத்—நடத்துவோம். இந்தியாவோடு, என்கிறார் பூட்டோ. ஆனால் அவர் அருகிலே இருந்த பாகிஸ்தானின் ஐ. நா. பிரதிநிதி, நாங்கள் சிறியவர், ஏன் கனவிலும் நினைக்கிறோம் இந்தியாவோடு போர் நடத்துவதைப் பற்றி என்கிறார். பூட்டோ, உலக நாடுகள் எங்களை ஆதரிக்கின்றன என்கிறார் ஒரு சமயம்; உடனே உலக நாடுகள் சபையே ஒரு கேலிக் கூத்து—மோசடி (**Fraud-Farce**) என்கிறார். ஐ. நா. கவுன்ஸிலுக்கு ஒரு பொதுச் செயலாளர். எதற்கு - தூக்கிலிடுபவர் (**Executioner**) ஒருவரை வைத்துக் கொள்ளலாம் என்கிறார்! நடவடிக்கைக் குறிப்பின் நகல்களை கிழித்தெறிகிறார். அழுகிறார்! நிதானமும் தெளிவும் தன்னிலை உணரும் அறிவும் அற்ற இத்தகையவர்களின் பிடியில் சிக்கித்தான் பாகிஸ்தான் இந்தச் சீரழிவைக் கண்டிருக்கிறது என்பதையும் தீரம் மிக்க வங்க நாட்டு மக்கள் உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல அவர்கள் உலகுக்கு உணர்த்தியது! ‘கம்யூனிஸ அபாயத்திலிருந்து ஜனநாயக நாடுகளைக் காப்பதற்காகவே’ தான் பிறப்பெடுத்திருப்பதாகப் பீற்றிக் கொண்ட அமெரிக்க அரசின் — இன்றைய நிர்வாகத்தின்—சாயத்தையும் வெளுக்கச் செய்துவிட்டது! மூர்க்கத்தனமான இராணுவக் கொடுமைகளையே வைத்து ஆட்சி நடத்திய யாஹ்யாகானைக் காப்பாற்ற முனையும்போது, தன்னுடைய நாட்டின் மூதாதையர்கள் எவ்வளவு உன்னத குறிக்கோள்களுக்காக அமெரிக்க நாட்டைத் தயார்படுத்தினார்கள் என்பதை அறவே மறந்துவிட்ட ஒரு முட்டாளாக நிக்ஸன் மாறியிருந்ததையும் அந்த வீரம் மிகுந்த வங்க நாட்டு மக்கள்தான் உலகுக்குத் துலங்க வைத்தார்கள். மனித குலத்தின் வரலாற்றில் இகழ் வாய்ந்த மனித கசாப்புக்காரன் என்ற நீங்காப் பழியை ஏற்கவிருக்கும் ஒரு நாலாந்தர இராணுவ மனிதனுக்கு ஏற்றுக்கொண்டு உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் கடலோரத்திற்குத் தன் கப்பல் படையின் ஒரு பிரிவை அனுப்ப முனைந்த ஒரு முட்டாள், நல்ல பாரம்பரியமுள்ள—மதிப்பும் பொறுப்பும் மிக்க மக்களின் அதிபதியாக வீற்றிருப்பதைப் பாருங்கள் என்று உலகத்தவருக்கு எடுத்துணர்த்திய மக்கள், வங்க நாட்டு மக்கள்! லிங்கனும் ரூஸ்வெல்ட்டும், கென்னடியும், உலகத்தின் மகோன்னதமான போர்வீரரும் தளகர்த்தரும் என்ற புகழோடு விளங்கிய

ஐசனோவரும் இருந்தாண்ட இடத்தில்—சிறு பொறியும் உலகப்போர் என்னும் பெருநெருப்பை மூட்டி விடக் கூடும் என்றுணர்ந்து அரசு வீற்றிருந்த இன்ன பிற அமெரிக்க நாட்டு ஜனாதிபதிகளும் நம் நினைவுக்கு வருகின்றார்கள்.

1941 பிப்ரவரியில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஜெர்மனியின் பயங்கரத் தாக்குதலுக்குப் பிரிட்டன் உள்ளாகியிருந்த நேரம், உலகே கொந்தளித்துக் கொண்டிருந்த வேளை. அப்போது ஜனாதிபதி ரூஸ்வெல்ட், லாங்பெலோவின் கவிதை வரிகளைச் சுட்டிக் காட்டி எழுதினார். எங்களுக்குப் பொருந்துவதுபோல இந்த வரிகள் உங்களுக்கும் பொருந்தும் என்றார்:

'Sail on, O Ship of State
Sail on, O Union strong
and great
Humanity with all its fears
with all the hopes of
future years
Is hanging breathless on thy
fate !"

"மனித குலம் எல்லாவிதமான தன் அச்சங்களுடனும் எதிர்கால நம்பிக்கைகளுடனும் உன்னுடைய விதியில் மூச்சுவிடமுடியாமல் திணறித் தொங்கிக்கொண்டிருக்கிறது! ஓ ஐக்கிய நாட்டுக் கப்பலே—ஐக்கிய நாடாகிய வலிமை மிக்க கப்பலே! விரைந்து கடலோடு!"—என்னும் கருத்தமைந்த வரிகளை இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு ஆளாகியிருந்த பிரிட்டனின் பிரதமராகவிருந்த வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு எழுதினார், மூன்று முறை அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரூஸ்வெல்ட்! அந்த இடத்தில் இன்றைக்கு நிக்ஸன்! ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்ட உள்ளங்கள் கண்ணீர் உகுக்காமல் இருக்கமுடியுமா?

இரண்டாம் உலகப் போரில் ரூஸ்வெல்ட் ஹிட்லரை ஆதரித்தால் எப்படி இருந்திருக்குமோ—அப்படித்தானே நிக்ஸன் ஹிட்லரைவிட கொடிய யாஹ்யாகானை ஆதரிப்பது இருக்கிறது! ஹிட்லராவது வேற்று நாட்டு மக்களைக் கொன்று குவித்தான்! ஆனால் மனிதக் கசாப்பு வேலையில் தேர்ந்தவனான யாஹ்யாகானோ தன் நாட்டு மக்களை அல்லவா கொன்று மலை மலையாகக் குவித்தான்? லாங்பெலோவின் கவிதை சொல்வதைப்போல, "மனித குலம் தன்னுடைய எல்லாவித அச்சங்களுடனும் எதிர் கால நம்பிக்கைகளுடனும் மூச்சுவிடத் திணறிய நிலையில் நிச்சயமாக அமெரிக்க நாடே உன் விதியில் தொங்கிக் கொண்டிருக்கிறது" என்று நாம் நிக்ஸனுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறோம். அவர் செவி மடுக்க மாட்டார் என்று தெரியும்; செனட்டர் கென்னடியும், புரொபசர் கால் பிரெய்த்தும், பழைய பிரிட்டனின் முதல்வர் வில்சனும், அமெரிக்க நாட்டுப் பத்திரிகைகளும், பிரிட்டனின் பத்திரிகைகளும் எடுத்துச் சொல்லியும் கேளாதவர் என்பது நமக்குத் தெரியும். இருந்தும் சொல்கிறோம் — கடமை அது என்பதால்! அவர்களுடைய மடமை கேளாதிருப்பது என்றால்,! கேட்பவர் கருத்து வருவதற்கு இந்த எண்ணங்கள் வழி வகுக்கும் என்ற நம்பிக்கை கொண்டு இவற்றைக் கூற நாம் கடமைப் பட்டிருக்கிறோம். நம்மை இந்தக் கடமைக்கும் நிக்ஸனை மடமைக்கும் ஆளாக்கியவர்கள் எழுச்சியும் கிளர்ச்சியும் மிக்க அந்த வங்கநாட்டு மக்கள்!

அது மட்டுமல்ல வங்க நாட்டு மக்களின் சாதனை; இந்திய நாட்டுக்கு ஆபத்தில்—இக்கட்டில்—இடுக்கண் வந்துற்ற நேரத்தில் உடுக்கையிழந்தவன் கைபோல—உற்றுழி உதவும் நண்பன் தோளோடு தோள் நிற்கும் தோழன் யாராக இருப்பான் என்பதை நாமும் உலகும் உணர்ந்திட வாய்ப்பளித்தவர்களும் வங்க நாட்டு மக்கள்தாம்! வங்க நாடு மூர்க்கத்தனமான முரட்டு இராணுவப் பிடியிலிருந்து விடுபடும் வரை இந்தியப் படையினரின் செயல் முறைகள் தடைபடா வண்ணம்-உலக நாடுகளின் அவையில் உதவிய அருமைத் தோழனாக சோவியத் நாடு நமக்குக் கிடைத்தது! சோவியத் நாடுதான் ஆபத்தில் உதவவல்ல நல்ல நண்பன் என்பதை நாம் அறியவும்; நம் நாட்டின் வெளிநாட்டுக்கொள்கை இன்னும் சற்று நீக்குப் போக்குக் கொண்டதாக அமைய நாம் முன்பே சிந்தித்திருக்க வேண்டும் என்கிற அறிவையும் நமக்கு ஊட்டியவர்கள் அந்த வங்கத்தின் சிங்க மைந்தர்களே ஆவர்!

அதுமட்டுமல்ல; காந்தியடிகள் நாள்முதலாக இந்தியப் பெருநாடு அடிமைத் தளையினை தென்கிழக்கு ஆகிய நாடுகளிடையேயும், ஆப்பிரிக்காக் கண்டத்திலேயும் ஒடித்தெறியும் முயற்சிக்கு முன்னோடியாக இருந்து வந்திருக்கிறது என்பதையும் அந்த வங்க மக்கள் மீண்டும் உலகுக்கு நினைவுபடுத்தியுள்ளனர். நிக்ஸன் வாழும் நாட்டிலே கூட காந்தியின் வழியைப் பின்பற்றி எழுந்தோங்கிய நீக்ரோ தலைவர் மார்டின் லூதர் கிங் நம் காந்தியடிகளின்—இந்தியாவின்—வழியைப் பெருமைப்படுத்தியவரே! ஆக, என்றைக்கும் அடிமை நிலை—சர்வாதிகாரம்— இராணுவ மூர்க்கத்தனம் இவைகளை எதிர்த்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இவற்றை நிலைநாட்ட இந்தியா தன்னாலான வகையில் கீழ்த்திசை நாடுகளுக்கும் — ஆப்பிரிக்கா தேசத்துக்கும் வழிகாட்டியிருக்கிறது. இந்த முறை தன் வாயிற்படியில் அமைந்த வங்க நாட்டு மக்களுக்கு நேரிட்ட முறையில் அந்த வகையில் உதவியிருக்கிறது. உண்மையாகவே ஜனநாயகத் தத்துவத்துக்கு இந்தியா செய்த மகத்தான பணி என்றே இந்த பாகிஸ்தான் — இந்தியப் போரை நாம் வர்ணிக்க விரும்புகிறோம். தானே நடத்திய தேர்தல்களில் இருந்து—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை—ஷேக் முஜிபுர் ரகிமானை—ஏற்று மதிப்பளித்திருந்தால் இப்போது 'விடாதே, ஓடிவிடப் போகிறார்! பிடி' — என்று மற்றவர்களால் இழிவுபடுத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்திருக்க நேரிடுமா? மக்களின் எழுச்சி ஆரவாரத்தை—விடுதலைக் கனலை துப்பாக்கிச் சத்தத்தில்—பீரங்கிகளின் ஒலியில் உலகு கேட்க முடியாதபடி செய்துவிடலாம் என்று கருதும் எந்த மனிதனுக்கும் இந்த முடிவுதான் வரும் என்பதை உலகம் எத்தனையோ பேர்களுக்குப் பிறகு யாஹ்யாகான் மூலமாகவும் அறியட்டும் என்று அறிவித்த பெருமை அந்த வங்க வீரர்களுக்கே உரித்தானது!

'நாடு என்னுடையது; பீரங்கியும் துப்பாக்கியும் என் நட்பு நாடு — ஜனநாயகத்தைக் காக்கவே பிறப்பெடுத்த நட்பு நாடு கொடுத்தது-நான் அப்படித்தான் சுட்டுத் தள்ளுவேன்; நீ யார் கேட்க?' என்று நம்மைப் பார்த்து யாஹ்யாகானும் புட்டோவும் கொக்கரிப்பது உண்மையாகவே இருக்கலாம். 'அது அவர்கள் உள்நாட்டு விவகாரம் என்று சிலவைப்

போன்ற அவர்தம் நண்பர்கள் கூறலாம். ஆனுல் நம்முடைய வினு என்ன? 'உங்கள் நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்த உரிமை இருக்கிறது என்பதே ஒரு அபத்தம். அதனையே வாதத்துக்காக ஏற்றுக்கொண்டாலும், உங்கள் கொடுமையின் முழு விளைவும் உங்கள் எல்லைக்குள்ளேயே இருந்திருக்கவேண்டும். உங்கள் கொடுமையின் விளைவாக எங்கள் நாட்டுக்கு ஒரு கோடிப் பேர் வந்தார்களே! அவர்களைப் பராமரிக்கத் தொடங்கினேம்; எங்கள் பொருளாதாரம் சீர்குலையத் தொடங்குகிறதே. உங்கள் கொடுமையின் விளைவால் உங்கள் நாட்டிலிருந்து வந்தவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு 13 மில்லியன் செலவிட வேண்டியிருக்கிறதே...இவ்வாறு உங்கள் நாட்டு மக்களை எங்கள் நாட்டுக்குள் செலுத்துவது ஒருவகை ஆக்கிரமிப்பு இல்லையா?' என்று கேட்கிறேம். அதற்கான விடை பாகிஸ்தானிடமிருந்து வெளிவரவில்லை. அதனுடைய நெருங்கிய நட்பு நாடுகளிடமிருந்தும் வரவில்லை, அதற்கு ஆதரவாக உலக நாடுகள் அவையில் வாக்களித்த 104 நாடுகளில் 88 நாடுகளின் மக்கள் தொகையைவிட நம் நாட்டுக்கு வந்த அகதிகளின் தொகை அதிகம். உலக நாடுகள் அவையில் அங்கம் வகிக்கும் நாடுகள் 88ஐவிட இந்தியாவுக்குள் வந்த கிழக்கு வங்க மக்களின் தொகை அதிகம்! ஒரு நாட்டுக்குள் வேறு ஒரு நாட்டையே கொண்டுவந்து வைத்தது போன்ற நிகழ்ச்சி! இவ்வாறு ஒரு அரசின் கீழ் வாழும் பெரும்பாலான மக்களை அந்த அரசு வைத்துப் படைக்கும் தகுதியை இழந்துவிட்டால், உடனே ஆங்கே வேருேர் தனியரசும் தனிநாடும் தோன்றிவிடுகிறது. அவ்வாறு தோன்றுவதை 'உலக சட்டம்' அனுமதிக்கிறது என்று நம்முடைய வெளி விவகார அமைச்சர் சர்தார் ஸ்வரன்சிங் ஐநாவில் எடுத்துரைத்தார். அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லும் தெளிவும் — பொதுவாகவே கேள்விக்குத் தக்க பதில் சொல்லும் பழக்கமும் பாகிஸ்தானை ஆண்டவர்களிடம் இருந்திடவில்லை. இனி ஆளப் போவதாகவும் - ஆயிரமாண்டுகளுக்குப் புனிதப் போர் நடத்த இருப்பதாகவும் கொக்கரிக்கும் பூட்டோவுக்கும் இல்லை!

ஆயிரமாண்டுப் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் புட்டோவே! யாஹ்யாகானுக்குப் பிறகு மேற்குப் பாகிஸ்தானத்துக்கு மட்டும் அரசுப் பொறுப் பேற்கயிருக்கும் வசை ஒப்பாரி மன்னரே! உமக்கு ஒரு உண்மையைச் சொல்லுகிறேம். கேட்குமளவுக்கு அமைதியான சிந்தனையும் தெளிவும் இருந்தால் கேட்கலாம்; இல்லாவிட்டால் யாஹ்யாவின் அடிச்சுவட்டையே நீரும் பின்பற்றலாம். நாம் சொல்ல விரும்பும் உண்மை இதுதான்!

"வரலாறு என்பது அவ்வப்போது மாறுதலடையும் சமுதாய மனவுணர்வுகளையும் அரசியல் வானத்தின் வெட்பதட்ப நிலையையும் நுணுகி அறியாத அறிவீனத்தால் அழிந்த பெருந்தலைவர்களின் முதல்தரமான துன்பங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது."

"History is made up of classical tragedies of great leaders who are doomed by their unsensitivity to the changes of social consciousness and political climate."

இந்த உண்மையைத்தான் வங்க நாட்டு மக்கள் இப்போது புதுப்பித்து உலகுக்கு அளித்திருக்கிருர்கள். இவைகளை மேற்குப் பாகிஸ்தானை ஆளப்போகும் யாராணுலும் எண்ணியே செயல்படவேண்டும். எண்ணுமல் செயல்பட்டால் என்னுகும் என்பதை யாஹ்யாவின் மூலம் வங்க தேசத்துச் சிங்க மனிதர்கள் ஏற்கனவே உலகுக்கு உணர்த்திவிட்டார்கள்! அந்த வங்க மக்களையும் அவர்தம் நாட்டையும் வாழ்த்துகிறேம். வாழ்க! வாழ்க!! ஃ

அறிவிப்பு

அச்சு இயந்திரப் பழுதின் காரணமாகவும், தவிர்க்கமுடியாத வேறு சில காரணங்களிஞலும் "ஹோம்ரூல்" ஆங்கில வார இதழ், நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும், வாசகர்கட்கும் தெரிவித்துக் கொள்கிறேம்.

நிர்வாகி "ஹோம்ரூல்",
காஞ்சிபுரம்-3.

உரைகல்:

சாணக்கியன் சாம்ராஜ்யம்

ஆசிரியர்: புலவர். தாமரைக்கண்ணன்

விலை: ரூ. 3—00

கிடைக்குமிடம்: அசோசியேஷன் பப்ளிஷிங் அவுஸ், 94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

நடிப்பதற்கென்றே எழுதப்பட்ட நாடகங்களில் பெரும்பாலும் படிப்பதற்குச் சுவையாக அமைவதில்லை. படிப்பதற்கென்றே சுவையாக எழுதப்பட்ட நடையழகு—நாடகங்கள் நடிப்பதற்குப் பொருந்துவதாக அமைவது அருமை. ஆனுல், எங்கோ ஓரிரு நாடகங்கள் படிக்கவும், நடிக்கவும் ஏற்றனவாக இருப்பதும் உண்டு. அத்தகைய நாடகங்களில் ஒன்றே சாணக்கியன் சாம்ராஜ்யம். வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு ஓரளவு கற்பனை வண்ணமும் கொடுத்து தாமரைக் கண்ணன் அவர்கள் இந்நாடகத்தைப் படைத்திருப்பது பாராட்டிற்குரியது.

திரைப்படத்திற்கென்றே எழுதப்பட்ட இந்நாடகத்தில் ஒவ்வொரு பாத்திரங்களும்சரியாகவே படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. நாடகாசிரியர் தாமரைக் கண்ணன், தமக்கிருப்பதாகக் கூறிக்கொள்ளும் பிடிவாதம் சாணக்கியனிடத்தில் பிரதிபலிக்கிறது. தொடர்ந்து 'தாமரைக்கு' எழுத்துத்துறையில் இப்பிடிவாதம் இருக்க வேண்டும் என்பது நம் ஆவல்.

"சாணக்கியனைத் திரைப்படமெடுக்க விரும்புபவர்கள் இந்நாடகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று நாடக விற்பன்னர் திரு. தி. க. சண்முகம் அவர்களே வசிட்டராக இருந்து வாழ்த்தியிருப்பதொன்றே இந்நாடகத்தின் சிறப்பிற்குப் போதுமானதாகும். பிறகென்ன......! 'தாமரை'யில் தேன்தானே சொட்டும்!!

—அரிமதி தென்னகன்.

படை திரட்டும் பக்தர்களே! (6)

காலம் இப்படியே போகாது!

ஆலயப் பாதுகாப்பு மலர் என்ற பெயரில் ஜனசங்கத் தியாக பூமி ஒரு மலரைப் போட, மறுக்க வேண்டிய அளவிற்கு அதில் ஒன்றும் இல்லாமற் போனாலும், மன்மதன் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மூக்கறுந்த மூளிகளுக்கு உன்முகத்தைப்பார் என்று காட்டுவதைப்போல, அறிவின் கொழுந்துகள் என்று ஆட்டம் போட்டவர்களின் அறைகுறைத்தனத்தை அவர்களே உணர்ந்து கொள்ளுவதற்காகவாவது சிலவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டிய நெருக்கடி கமக்கு உள்ளாயிற்று. எனவே சூடேற்றிய சொற்களைத் தொடர்களாக்கி, உண்மையின் வலிமையின் வலிமைமயன்ன என்பதை,' உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்க்குப் புரிய வைக்கும் பணியில் ஈடுபட்டோம்.

ஆலயப் பாதுகாப்பு என்பது முழுக்க முழுக்கப் போர்வையே தவிர, உண்மையான உருவம் அல்ல என்பதை ஓரளவு எடுத்துக் காட்ட முயன்றோம். ஜனசங்கச் சாமிகளுக்கு ஆலயப் பற்றோ, ஆண்டவன் பற்றோ அணுவளவும் கிடையாது. கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவன், கண்களுக்குத் தெரியும் துரும்பையும் கட்டுமரமாகக் கருதிப் பிடிக்கத் துடிப்பது போல் ஆலயப் பாதுகாப்புத் துரும்பைப் பிடித்துக்கொண்டு அரசியல் கடலிலிருந்து நீந்திக் கரையேற நினைக்கும் குருட்டு அரசியல் வெறியர்கள் கூத்தே ஆலயப்பாதுகாப்பு என்பதை நாளை இந்நாடு உணரத்தான் போகிறது. தெய்வத்தின் பெயரால் இழந்ததைப் பெறும் வழியைத் தேடுவோர்க்காக இந்த உண்மைகளை நாம் தெளிவாக்கவில்லை, காரணம், அவர்கள் தெரிந்தே கிணற்றில் வீழ்பவர்கள். ஓநாய்களை நம்பிப் பின் தொடரும் ஆட்டுக் குட்டிகளுக்காகத்தான் இத்தனை விளக்கங்களும். என்னதான் இருந்தாலும், இன்றைக்கு எவர் பின்னால் சுற்றினாலும் ஆட்டுக்குட்டி போன்றவர்கள் நம்மோடு இருக்கப்போகின்றவர்கள். ஓநாய் மனத்தவர்களிடமிருந்து காப்பாற்றும் பொறுப்பை நாம் தானே மேற்கொண்டாக வேண்டும்.

இந்தக் கடமையினை நினைத்தே இதுவரை ஐந்து கட்டுரை எழுதினோம். எங்கே உன் விடை, என்ன உன் ஆதாரம் என்று தெளிவாகவே கேட்டோம். 3-12-71 தியாகபூமி இதழ்களில் அடுத்தவாரம் பாருங்கள் என்று அறிவித்தது, ஆனால், 10, 17-12-71 தியாக பூமியில் நமக்குத்தந்த விடைகளைத் தேடிப் பார்த்துக் களைத்தோம்; ஒன்றும் காணவில்லை. அடுத்தவரும் இதழ்களைப் பார்ப்போம்; கொட்டிக் கவிழ்க்கும் ஆதாரங்கள் அத்தனையும் குப்பைகளே எனக் காட்டுவோம் என்றிருந்த நமக்கு ஆனந்த விகடன் தொடர்ந்து வேலையைக் கொடுத்து விட்டது.

— பொடியன் —

12-12-71 இதழில் நாடகத்தில் தமிழ் அர்ச்சனையா? என்ற தலைப்பில், சென்னை வியாசர்பாடி திரு சி. தெ. இளமுருகன் அவர்களின் மடலையும், 'ஹரே ராமா, கிருஷ்ணா' என்னும் நாடகத்தின் ஆசிரியர் 'மூளி' அவர்களின் ... மன்னிக்கவும், மௌளி அவர்களின் பதிலையும் வெளியிட்டிருக்கிறது.

நாடகத்தில், அகோரம் என்பவன், குதிரைவண்டிக்காரன் ஒருவனை "டேய் கழுதை, சோமாறி, திருடா" என்று திட்டுகிறான். பக்கத்தில் இருந்த ஒரு வைணவப் பெரியவர் "என்னடா கடவுளுக்குத்தமிழில் அர்ச்சனை செய்கிறாயா?" என்று கேட்பதாக வருகிறது. இந்த நகைச்சுவையில் மூழ்கி அரங்கமே அதிர்ந்திருக்கிறது; 'நண்பர் இளமுருகு அவர்களுக்கோ உடலும் உள்ளமும் எரிந்திருக்கிறது; உடனே விகடனுக்கு மடல் தீட்டியிருக்கிறார். விகடனார் வெளியிட்டுத் தன் விகட வேலையைச் செய்திருக்கிறது. மௌளியின் பதிலை முதலில் பார்ப்போம்.

'டேய் கழுதை, சோமாறி திருடா' என்று திட்டியதை வைணவப்பெரியார் தமிழ் அர்ச்சனை என்றது நகைச்சுவையாம்,

அந்தணர் வீடுகளில் வசவுகளை அர்ச்சனைகள் என்று சொல்வார்களாம்.

வசவு என்பதும் அர்ச்சனை என்பதும் ஒன்றாகையால் தமிழ்வசவை, தமிழ் அர்ச்சனை என்றது தவறில்லையாம்.

சக்தியின்றி சிவம் சவமே என்றும், செம்மான் மகளைத் திருடும் திருடன் என்றும் இலக்கியங்கள் சிவனையும், முருகனையும் சோமாறியென்றும் திருடன் என்றும் சொல்லப் பெற்றிருப்பதால், கழுதை, சோமாறி என்பன இலக்கியங்களை இழிவு படுத்துவதாகாதாம்.'

வக்கணைப் பேச்சுகளை வாரி இறைத்துவிட்டு வருத்தம் வேறு தெரிவித்திருக்கிறார் மௌளி. வேண்டுமென்றே எட்டியுதைத்துவிட்டு, விலா நொறுக்கப்படுமோ என்ற அச்சத்தில் 'சிவசிவா' என்று தொட்டுக் கும்பிடும் குறும்பனுக்கும் மௌளிக்கும் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை.

அறிவிப்பு

ஆலயப் பாதுகாப்பு எனும் ஆரியப் புரட்டு குறித்து நமது வினாக்களுக்கு 'தியாகபூமி' ஏடு, விடைகளை தேடிக் கொண்டிருக்கிறதாம்! தேடி எடுத்துத் தரும் வரையில், இத்தொடரை இத்துடன் முடித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

சிறப்புக் கட்டுரை!

நாடகத்திற்கு நகைச்சுவை வேண்டுமானால் 'அம்மாமி பாஷை' ஒன்று போதுமே; வாயிலே 'ஓசி' வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு 'சரிகம' என்று பாட்டைப் பாடும் 'மாமா' ஒன்று போதுமே; அதை விட்டுத் தமிழை வைத்துத்தான் நகைச்சுவை காட்ட வேண்டுமா?

தாயை வைத்துக் காசு சேர்க்கும் தன்மை எவனுக்குண்டோ, தாயின் மானத்தைத் செல்வம் சேர்க்கும் சரியான முதலீடாக எவன் கருதுகிறானோ, அவன்தான் தாய்மொழியை நகைச்சுவைக்குத் துணையாகும் 'கேலிப் பொருளாகக்' கருதுவான் என்பதைத் தவிர மௌளிக்கு விடைதர வேறு என்ன இருக்கிறது!!

அந்தணர் வீடுகளில், திட்டுவதை அர்ச்சனை என்பார்களாம்!! அந்தணர் வீட்டில் மட்டுந்தானா வசவை அர்ச்சனை என்கிறார்கள்? சாதாரண கைவண்டி இழுப்பவன்கூட இப்படித்தான் சொல்லுகிறான்.

ஏன்?

கோயில்களில் காலகாலமாகச் சொல்லிக்கொண்டு வரும் அர்ச்சனையைக் கேட்டதால்தான் தமிழகத்தில் அனைவருமே திட்டுவதை அர்ச்சனை என்கிறார்கள். ஒருவன் தன்னுடைய மேலதிகாரி ஆங்கிலத்தில் திட்டினாலும், 'இன்றைக்குச் சரியான அர்ச்சனை' என்றுதான் சொல்லுவான். நண்பர் மௌளிக்கு இந்த அனுபவம் இருந்திருக்கலாம். அப்படி ஆங்கில மொழியில் திட்டைப் பெற்றவன் ஆங்கில அர்ச்சனை பெற்றதாகக் கூறுவதில்லை. காரணம், அர்ச்சனை என்றால் சமஸ்கிருதம், சமஸ்கிருதம் என்றால் அர்ச்சனை என்றிருந்த கோயில்களைச் சுற்றிச் சுற்றிப் பெற்ற அனுபவந்தான்.

பூப்பு நீராட்டு விழாவா? காதணி விழாவா? புது வீடு புகு விழாவா? திருமணமா? பதினாறும் நாள் மாண்டவர்களுக்குச் செய்யும் கருமமா? எங்கும் சமஸ்கிருத மந்திரத்தைக் கேட்டுக் கேட்டு, எங்கும் ஒரே வகையான அலறலைக் கேட்டுக் கேட்டுத்தான் தமிழகத்து மனிதன் வசவுகளையும், கீழான வார்த்தைகளையும் மொழி வேறுபாடு கருதாமல் அர்ச்சனை என்றான்.

இந்த உண்மைகளையெல்லாம் மௌளி அறியாதவர் அல்லர். அறிந்தும் தாய்மொழிப் பற்று அவரை, தமிழையும், தமிழ் அர்ச்சனையையும் கிண்டல் செய்யத் தூண்டியிருக்கிறது.

தமிழ் அர்ச்சனைபற்றி வாதப் பிரதிவாதங்கள் இருக்கும்போது, ஒரு கீழ் மகனின் கீழ்மையான வார்த்தைகளை 'அர்ச்சனை' என்று சொல்லியிருந்தால் அது நகைச்சுவையாக இருக்கலாம், ஆனால் தமிழ் அர்ச்சனை என்றது, 'தமிழ் அர்ச்சனையின்மீது உள்ள வெறுப்பைத்தான் காட்டுவதாகும். நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஐந்து வயது 'அம்பிப்' பயலைக் கேட்டாலே இந்த உண்மையைக் கூறுவான். சிறுபான்மை, மிகப் பெரும்பான்மையின்மேல் குதிரை ஏற நினைப்பது 'யாகியாகான்' புத்தி என்பதை வங்கத்துச் சிங்கம் முஜிபுர் ரகுமான் அவர்களைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. சாதாரண சத்திரத்துச் சாப்பாட்டைக் கேட்டாலே போதும்!!

இதையெல்லாம் மறந்துவிட்டு அர்ச்சனையும் வசவும் அந்தணர் வீட்டில் ஒன்றுதான் என்பதும், தமிழில் திட்டுவதைத் தமிழ் அர்ச்சனை என்பது தவறில்லை என்பதும் வயிற்றுக்கு இல்லாமல் திருடினேன் என்று பகற்கொள்ளைக்காரன் சொல்லுவதும் ஒன்றுதான் என்பதை விகடனார் உலகிற்கே சொல்வார்; மௌளிக்கு மட்டும் சொல்லாமலா இருப்பார்

திட்டுவதைத் தமிழ் அர்ச்சனை என்பது தேவாரம், திருவாசகம் போன்ற இலக்கியங்களை இழிவு படுத்துவதாகாதா என்று நண்பர் இளமுருகு கேட்டால், மௌளி அவர்கள் வெண்டைக்காய் விளக்கம் சொல்கிறார்.

கடவுளைத் திருடன், சோமாறி என்று இலக்கியம் சொல்லுகிறதாம்;; எடுத்ததற்கெல்லாம் 'சடயர்' என்று கூறும் 'சோ'வின் சொந்தக்கார மௌளிக்கு வஞ்சப் புகழ்ச்சி தெரியாமல் இருக்க முடியாது. கடவுளைத் திருடன் என்பதும், சோமாறி என்பதும் பழிப்பதுபோல் புகழ்வதாகும். முழுப் பூசனைக்காயைப் பிடி சோற்றில் மறைக்கப் பார்ப்பார்க்கு உடலெல்லாம் மூளை என்ற நினைப்பு போலும்!!

இறுதியாக மௌளிக்கும், மற்றவர்கட்கும் சொல்லுகிறோம்; வேண்டாம் இந்த விபரீத வேலைகள்.

தமிழன் வெற்றும் பேச்சாலும், வீர எழுத்துக்களாலும் தமிழ்ப் பகைவரை எதிர்ப்பானே தவிர, செயலில் இறங்கமாட்டான் என்று நினைத்து மகிழ வேண்டாம்!!

ஏன்...?

காலம் இப்படியே போகாது!!

இது வளர்ந்துவரும் தமிழ் உணர்வுக் காலத்தின் எச்சரிக்கை!!

பொறுமையாக எண்ணிப் பார்த்தால் மௌளிகளுக்குப் புரியும்!!

அடுத்த ஜனாதிபதி எப்போது?

''ஆற்றங் கரையின் மரமும்,
அரசறிய வீற்றிருந்த வாழ்வும்
விழுமன்றே!''

என்பது ஔவைப் பாட்டு. இதற்கு ஆயிரக் கணக்கில் ஆதாரங்கள் உண்டு என்பதை இலக்கியங்களில், வரலாறுகளில் கண்டிருக்கிறோம்.

இதோ, நம் கண்முன்னேயே ஒரு அரசு, பத்துத் தடவைகள் செத்தொழிந்திருக்கின்றன!

ஆமாம், கிழக்கு வங்கம் உள்ளிட்ட பாகிஸ்தானில் இதுவரையில் பத்துத் தடவைகள் ஆட்சிக் கவிழ்ந்து அல்லது கவிழ்க்கப்பட்டுப் போயிருக்கிறது.

1947 ஆகஸ்டு 15-ல் முதன் முதலில் பிறந்த பாகிஸ்தானுக்கு முகமதலி ஜின்னா எல்லாமாக இருந்தார்.

1971-இல் கடைசியாக கவிழ்ந்த பாகிஸ்தானுக்கு யாகியாகான் எல்லாமுமாக இருந்தார்.

கிழக்கு வங்கம் நீங்கிய பாகிஸ்தானுக்கு ஐ. நா. புகழ் புட்டோ இப்போது அதிபராகவும், அதிகாரியாகவும் ஆகி இருக்கிறார்.

அடுத்த ஜனாதிபதியையும் விரைவில் எதிர்பார்க்கலாம்!

பஞ்சாயத்து!

— சீவ. நடராசன் —

கணவன் வீட்டிலிருந்து கல்யாணி ஓடி வந்துவிட்டதாக ஊரெல்லாம் பேச்சு அடிபட்டுக்கொண்டிருந்தது.

எந்த ஒரு சேதிக்கும் கண் மூக்கு வைத்து சிரஞ்சீவித் தனமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொன்னியூர் வாசிகளுக்கு கல்யாணியின் சமாச்சாரம் மூன்று மாத காலத்திற்காவது அடிபட்டுக் கொண்டிருக்கும். அதற்குப் பிறகு வேறெதுவும் கிடைக்காமலா போய்விடும் அவர்களுக்கு.

கல்யாணி ஏன் வந்தாள். திருமணமாகி மூன்றே மாதமான கல்யாணிக்கு கணவன் வீட்டைவிட்டு ஓடிவரும் அளவுக்கு அவள் அங்கே என்ன துன்பப்பட்டுக்கொண்டிருந்தாள் என்றெல்லாம் ஊராருக்கு சிந்திக்க நேரமில்லை யென்ருலும், அப்போதே தெரியும்; அது ஒரு மாதிரிதான் என்றெல்லாம் திண்ணைப் பேச்சுப் பேசுவதற்கு எங்கிருந்துதான் நேரம் கிடைக்குமோ? அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

கல்யாணி என்ற சொல்லுக்குப் புதியதாகப் பொருள்கூற வேண்டுமானுல் காலமெல்லாம் கண்ணீர் விடப் பிறந்தவள் என்பதை திட்டவட்டமாகக் கூறும் அளவுக்கு அவள் வறுமையைச் சொந்தமாக்கிக்கொண்டிருந்தாள்.

பொன்னியூரின் வயற்காட்டு வேலைகள் அவள் வயிறை வளர்க்க மட்டும் பயன் படவில்லை. அவளின் வாலிபத்திற்கு மெருகினை ஊட்டவும் பயன்பட்டது.

சிற்பியின் அளவுகளுக்கேற்ப செதுக்கப்பட்ட சிலைபோல, பருவம் அவளது உடலை அத்தனை அளவாக அமைத்திருந்தது.

தந்தையை மட்டுமே, அதுவும் படுத்த படுக்கையாக இறுமிக்கொண்டிருக்கும் கிழவனை மட்டுமே துணையாகக்கொண்ட கல்யாணிக்கு வாலிபப் பட்டாளங்கள் துணையாக இருக்க ‘முன்வந்தன. ஆனுல் நிரந்தரமாக அல்ல, நேரத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ள.

பாழும் கல்யாணி ஒப்பவில்லை. சென்னையிலே உள்ள ஒரு கிழவனைத் தன் கழுத்தை நீட்டிக் கணவனுக வரித்துக் கொண்டாள்.

இந்த விவரங்கள் ஊரார் அனைவருக்குமே தெரியும். ஊராரைவிட இன்னும் சற்று அதிகமாகவே தெரிந்தவன் என்ற முறையில் நான் அவளிடம் அனுதாபம் உள்ளவனுக நடந்துகொண்டேன்.

எனக்கு, ஊராரின் ஏச்சும் பேச்சும் காரணமற்றதாக காலத்துக்கு மாறுபட்டதாகத் தெரிந்தது.

தெரிந்து என்ன பயன்! மடமையினை நாம் எத்தனை எத்தனையோ நூற்ருண்டுகளாக வளர்த்திருக்கிரேமே! விழுதுவிட்டு வளர்ந்திருக்கும் அந்த ஆலமரத்தை இன்றும் நம்மால் வெட்டித்தள்ள முடிகிறதா? இல்லையே! மரத்தையும் வெட்ட வேண்டும், விழுதுகளையும் வெட்ட வேண்டும் இது முறை. ஆனுல் தெரிந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள்கூட விழுதுகளை விட்டு மரத்தை வெட்டுகிருர்கள்.

இதே நிலையில்தான் கல்யாணியை விமர்சனப் பொருளாக்கியவர்கள் அதோடு என்னையும் தொடர்புபடுத்தியதுதான் எனக்கு வேதனையை அளித்தது.

இருட்டிய பின் யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டு ரயிலேறி திண்டிவனம் வந்து இறங்கி பொன்னியூருக்கு வரவும், நானும் அதே திண்டிவனத்தின் சினிமாக் கொட்டகை யொன்றில் இரண்டாவது காட்சி பார்த்துவிட்டு வீடு வந்து சேரவும் சரியாக இருந்ததே ஊராரின் சந்தேகத்துக்குக் காரணம்.

ஆரம்பப் பள்ளிப் படிப்பு வரை நானும் கல்யாணியும் ஒன்ருகப் படித்தது. இருவரும் பக்கத்து வீட்டுக்காரர்களாக இருந்தது அவர்கள் கூற்று மெய்யென்பதற்குத் தாளம் போடுவதுபோலிருந்தது.

அவ்வளவு ஏன்! என் தாய் கூட என்னை வேறு பார்வையோடுதான் பார்த்தார்கள். என்னுடைய ஒவ்வொரு செயலையும் உன்னிப்பாகக் கவனிப்பதுபோல் அவர்களின் நடவடிக்கை அமைந்திருந்தது.

சிறுகதை!

கல்யாணியைப்போல ஒரு பெண்ணைப் பார்த்து உனக்குக் கல்யாணம் செய்துவிட்டால் போதும் என்று என் தாய் மூச்சுக்கு முப்பத்திரண்டு முறை சொல்லிக்கொண்டிருப்பார்களே ஒழிய “கல்யாணியைத்தான் கட்டிக் கொள்ளேண்டா” என்று ஒரே ஒரு முறை சொல்லியிருந்தாலும் மீன்கொத்தி மாதிரி அவளைப் பாய்ந்து என்னுடையவளாக்கிக் கொண்டிருப்பேன்.

என்ன செய்வது! அம்மாவுக்கு சாதி ஒத்து வரவில்லை. அதனுல் எனக்கு நீதி கிடைக்கவில்லை.

இன்னும் சில நாட்களிலே தன் மங்கலமான பெயர் கிழக்கணவன் மரணத்தினுல் அமங்கலமாகிவிடும் என்று தெரிந்திருந்தும் அவளும் அந்தக் கிழவனுக்கு வளைந்து கொடுத்தாள்.

இழிதகைக் கொள்கைகளுக்கும் ஈனச் சொற்களுக்கும் நாம் மிக விரைவில் தலைகுனியப் போகிரேும் என்று நினைத்தாளோ இல்லையோ எதிர்காலம் அவளைத் தலைகுனிய வைத்துவிட்டது.

புத்தனுக்கு ஞானேதயம் அளித்த போதி மரத்துக்குள்ள பெருமையைவிட அதிகமான பெருமையை பொன்னியூர் அரச மரத்தடி பெற்றிருக்கிறது என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் அரச மரத்தடியில் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது,

குளத்தங்கரையிலும் குழாயடியிலும் குடும்ப சச்சரவுகளைத் துவைத்து அலசுகின்ற குணவதிகள்கூட முழுவதுமாகக் கூடியிருந்தார்கள்.

பஞ்சாயத்து நடைபெறப் போகிறது என்பதைத் தெரிந்துகொண்டு ஒரு மூலையாக நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஊருக்குப் பெரிய மனிதர்கள் என்று கருதப்படுகின்ற நான்கைந்து பேர்கள் மிடுக்குடன் அமர்ந்துகொண்டிருந்தார்கள்.

கல்யாணி பஞ்சாயத்தாரின் முன்னிலையில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தாள்.

இளமையெனும் முலாம் பூசிக்கொண்டு கல்யாணியின் கணவனும் வாய் நிறைய வெற்றிலைப் பாக்கைக் குதப்பிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அந்தக் கிழவனைப் பார்த்த போது, கல்யாணியின்மேல்

"ஐயோ பாவம்!" எனப் பரிதாபப் படலாம் போலிருந்தது.

பஞ்சாயத்துத் தலைவரின் கண்கள் கழுகுபோலப் பார்த்து என்னைக் கண்டுகொண்டன.

"என்ன ரவி சார்! மூலையிலே போய் உட்கார்ந்துட்டீங்க! இப்படி மேடைக்கு வாங்க!"

தலைவருக்குப் பின்னாலேயே கூட்டமும் கொல்லென்று சிரித்து ஓய்ந்தது. துடுக்குக்காரியாகவும் துணிச்சல் உள்ளவளாகவும் கருதப்பட்ட கல்யாணியே கூனிக் குறுகிக் கொண்டு நிற்கும்போது நான் எம்மாத்திரம்!

நான் போய் அவர்கள் காட்டிய இடத்தில் அமர்ந்ததும் பஞ்சாயத்து ஆரம்பமாயிற்று! சொத்தையான விவகாரத்தை மிகவும் சத்துள்ளதாக விவரித்துக் கொண்டிருந்தான் கல்யாணியின் கணவன்.

எப்படியும் நியாயமான நீதியை வழங்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் போலப் பஞ்சாயத்தார் கிழவன்-கல்யாணி விவகாரத்திற்குச் சப்பைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

வாக்குவாதங்களை, கூட்டம் சூள் கொட்டியும் புருவத்தை நெறித்தும் அபிநயத்தோடு கேட்டுக்கொண்டிருந்தது.

பச்சை மரத்திலே ஆணியை அடித்ததுபோல கிழவன் பேச ஆரம்பித்து விட்டான்.

நான் இவளுக்கு என்ன குறையை வைச்சேன். எல்லாச் செலவையும் நானே போட்டு இவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதும் இல்லாமே இவங்கப்பன் வைத்திய செலவுக்கும் இருநூறு ரூபா கொடுத்தேன். அதுதானு, நாள்தவருமே இவளுக்குக் கறியும் மீனும் வாங்கிப் போட்டேன். இவ்வளவுக்கும் இவ ஒருநாளாவது என்னோட ஆசையாப் பேசினது உண்டா? புருசன்தானேன்னு அன்பாப் பழகினது உண்டா-ஒண்ணும் கிடையாது. இவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இது வரையும் நான் கடுகளவு சுகத்தைக்கூட கண்டதில்லை. ஓடுகாலி! ஓடிவந்துட்டா.

கிழவனின் கொந்தளிப்பு அவன் குரலில் குமுறிக் கொண்டிருந்தது.

கல்யாணி என்ன பதில் கூறப் போகிறாள். அவளைப் பஞ்சாயத்துக் கூட்டம் என்ன சொல்லிக் காறி உமிழப் போகிறது. அவளின் வாழ்க்கை இனி எப்படிக் கழியப் போகிறது.

அவளுக்காக நான் என் மனத்தில் ஆறுதலை வளர்த்துக் கொண்டிருந்தேன். "எல்லாவற்றையும் கூறி விடட்டுமா" என்பதுபோல் அவள் என்னைப் பார்த்தாள். நான் தலையைக் கவிழ்ந்துக்கொண்டேன்.

உடையால், உயர்ந்த மனிதர், பணத்தால் பண்பாளர் என்று தம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் பஞ்சாயத்துக்காரர்களுக்கு முன்னால் ஏழையாக கிழிசல் புடவைக்கு மட்டுமே சொந்தக்காரியாகக் கல்யாணி நின்றுகொண்டிருக்கும் காட்சி நல்லவர்களின் மனத்தை வதைக்கத்தான் செய்யும். ஆனால் அவர்களுக்கு...!

ஏழையின் சொல் அம்பலம் ஏறப் போகிறது. சொல்லைப் பொறுத்து இருக்கிறது வழங்கப் படப் போகும் தீர்ப்பு.

கசப்பான சம்பவங்களை, கண்ணைப்போல வளர்த்த மகள் அவள் வாயாலேயே எப்படிச் சொல்ல முடியும் என்று நினைத்துக் கல்யாணியின் தந்தை முருகேசன் தன் உடம்பையும் பொருட்படுத்தாமல் அங்கு வந்து விட்டிருந்தான்.

"நான் சொல்லுகிறேன் பதில்" என்று அவன் உணர்ச்சி வசப்பட்டு எழுந்தபோதுதான் எல்லோருமே அவனைக் கவனித்தார்கள்.

தனக்குச் சரியான முடிவு தீர்ப்பாக வெளிவரும் என்ற ஒளி அவன் முகத்தில் படரவில்லை.

"என்ன முருகேசா! உன் மருமகப் பிள்ளை சொன்னதெல்லாம் கேட்டுக்கிட்டிருந்தியா! என்ன சொல்லப் போறே! கல்யாணி வாழட்டும்—இல்லேன்னு கல்யாணச் செலவைத் தரச் சொல்லுங்கன்னு சொல்றுரே"

கல்யாணச் செலவை நான் எங்கிருந்து கொடுக்கப் போறேன் எசமான். என் பொண்ணு எட்டி மரந்தான். ஆனு அது பசுமையா இருக்கத்தான் நான் ஆசைப்படுவேன். வாழாவெட்டின்னு பட்ட மரமா அவளைப் பார்க்க நான் ஆசைப்படல்லே! என் மருமகப் பிள்ளையோட கல்யாணியை அனுப்பத் தயாராயிருக்கேன். அதுக்கு முன்னலே நான் ஒண்ணு மட்டும் சொல்லிடறேன். அவரு வீட்டிலே என் மகளுக்கு மைத்துனனும் மூத்தாள் பையனும் ரெண்டு பேரு இருக்காங்க! மருமகப் பிள்ளையோடு தம்பிக்கும் நாற்பது நாற்பத்தைந்து வயசாகுது. பிள்ளையும் கல்யாணத்துக்கு ஏத்த மாதிரிதான் இருக்கான்-இவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணத்தைப் பண்ணி வச்சிடட்டும். இல்லே தனிக் குடித்தனம் வைக்கட்டும் இவளை அனுப்பறேன். காலையிலே எட்டு மணிக்குப் போனூர்னு ராத்திரி பத்து மணிக்குத்தான் திரும்பி வருவாரு. என் மருமகப் பிள்ளை. இடையிலே என் மக படற சித்திரவதையை யார் கவனிக்கிறு! நித்தம் கிழட்டுப் புலி கிட்டேயும், சீறும் சிறுத்தைகிட்டேயும் ஓநாய் கிட்டேயும் என் மக வாழணும்னு முடியுமா?

கிழவனின் ஆத்திரம் நெருப்புத் துண்டங்களாகக் கீழே விழுந்தாலும் உண்மை நாகரிகமாக அதுவும் ஆணித்தரமாக வெளிப்பட்டுவிட்டது.

நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். கல்யாணி தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

எதையுமே சொல்ல மனமின்றி கிழட்டுக் கணவன் நடையைக் கட்டிக் கொண்டிருந்தான். இனி அவனல்என்ன பேசமுடியும். ஊரறிய அவன் மானம் ஏலத்தில்விலை பேசப்பட்ட பிறகு அவன் யாரிடம் எந்த முகத்தை வைத்துக்கொண்டு எதைப்பற்றிப் பேசமுடியும்.

காலமாறுதலுக் கேற்ப அறிவுக்கொப்ப ஏற்படும் கொள்கைகளை துணிந்து நிறைவேற்றுவது என்ற முடிவோடு நான் அவளைப் பார்த்தேன். அவளும் உடன் நிற்பது போன்று, இசைவினை இதழ்களின் நகையாலும் விழிகளின் குறும்பாலும் எனக்குக் காட்டியது இமயத்தையே வென்றுவிட்ட பெருமித உணர்ச்சி எனக்குத் தோன்றியது.

எனது முடிவை நான் எப்படியும் என் தாயிடம் சொல்லிவிட வேண்டும். அவர்கள் சம்மதத்தைப் பெற்று விடவேண்டும் என்ற ஆர்வத்தோடு முருகேசனை கைத்தாங்கலாகவும் கல்யாணியைக் கரம் பற்றியும் அவர்களது வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனேன்.

இந்த ஒரு சம்பவத்திற்கே பஞ்சாயத்து வாயடைத்துப் போய் விட்டது. எதிர் காலத்தில் இது போன்றவைகட்கும் இன்னும் நிறைய நடப்பவைக்கும் சமுதாயம் மாறுவிட்டால் செயலிழந்து போவது உறுதியென்பதை பஞ்சாயத்தின் மௌனம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. ஃ

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால்; காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.